சுதேசி நிலையம்

★

தேசியக்கொடி, ராட்டினம், மகாத்மாவின் போட்டோ முதலியவைகளும் அவற்றின்மீது ஆங்கிலத்திலோ, தமிழிலோ எழுத்துக்கள் எழுதியும் கொடுக்கப்படும்.

★

அதேமாதிரியில் ஆங்கில எழுத்துப் பித்தான்களும், தலைவர்கள் பாட்ஜு (மெடல்) களும், காங்கிரஸ் கொடி (பாட்ஜும்,) ரெடிமேடாகக் கிடைக்கும்.

★

பொது ஸ்தாபனங்களுக்கு நூற்றுக் கணக்கில் சகாயமான விலையில் தருகின்றோம்.

எங்களிடம் தேசீயநூல்கள் பலவும் கிடைக்கும்.

விவரங்கட்கு:—

சுதேசி நிலையம்,
38, மார்க்கட் ஸ்திரீட்,
சிங்கப்பூர்.

ஹிந்தி அவசியமா?

சுவாமி சுத்தானந்த பாரதியார்

எழுதியது

போஸ் பிரசுராலயம்

காரைக்குடி

1938

பதிப்புரிமை பெற்றது]

[விலை அணா 4

ஹிந்துஸ்தானி — ஒரு சைக்கிள் வண்டி

பிரதம மந்திரி கனம் ராஜாஜியைப் பார்த்து,

''எங்கள் பிள்ளை குட்டிகளைக் கட்டாயமாய் ஹிந்துஸ்தானி படிக்க வைப்பதற்கு நீங்கள் யார்?'' என்று ஒரு நண்பர் கேட்டார். அப்போது ராஜாஜி,

''ஆம்; எனக்குத்தான் உங்கள் பிள்ளைகுட்டிகளின் க்ஷேமத்திலே மிகுந்த அக்கரையுண்டு. எதிர்காலத்திலே ஹிந்துஸ்தானி தெரியாதவர்கள் எவ்விதப் பரிதாபகரமான நிலைமையிலிருப்பார்களென்பதை நான் நன்ருகத் தெரிந்திருப்பதால்தான் சிறுவர்கள் அதைக்கட்டாயமாய்ப் படிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். வயதுவந்தவர்கள் கற்பது சிறிது சிரமம். சிறுவர்கள் விளையாட்டாகவே கற்றுக் கொள்வர். வெளிநாடுகளிலே மூன்று பாஷைகளல்ல; ஐந்து பாஷைகள் படிக்கிருர்கள். தவிர, ஹிந்துஸ்தானி என்பது ஒரு சைக்கிள் வண்டிபோல. சமையற் கட்டுக்குள் அதை உபயோகிக்கவேண்டுவதில்லை. வீட்டுக்கு வெளியிலே போகும்போது சைக்கிளைப்போல ஹிந்துஸ்தானி! கற்றுக் கொள்ளுகிற சிறுவர்கள் மூன்றுகால் சைக்கிளை சமையற் கட்டுக்குள் விட்டுக்கொண்டு வருவது சகஜம்; அதைப் போல தமிழ் நாட்டில் ஆரம்பகாலத்தில் ஹிந்துஸ்தானி எல்லோருடைய சமையற்கட்டுக்குள்ளும் நுழையும். அதைக் கண்டு மிரளாதீர்கள். தமிழ் மொழி அழியாது; அதற்கு நான் உத்தரவாதம்'' என்று விடையளித்தார்.

ஹிந்துஸ்தானி ஏன்?

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

ஹிந்துஸ்தானி கற்போம்—தமிழா
இனிய தேச பாஷை;
இந்தியாவில் எங்கும்—பரவி
யிருக்கும் இனிய பாஷை.
சொந்த பாஷை வேண்டும்—நாம்
சுதந்திரமாய் வாழ—இன்றேல்
சந்தைக் கூட்டம் போலே—நமது
சமூக வாழ்க்கை யாகும்.

அரிய நல்லவர்கள்—நம்
அடிமை தீர்க்க வேண்டிப்
பெரிய சிந்தை கொண்டே—ஹிந்தி
பேசவேண்டும் என்றார்—அதனால்
உரிய காலந் தன்னில்—நாம்
ஒன்று பட்டு வாழ்வோம்.
சிறிய நோக்கம் வேண்டாம்—தமிழா
தேசத்தோடு செல்வோம்!

இருமொழிகள் கற்றால்—நமக்கே
இருமடங்கு நலமாம்;
பெருகுங் கல்வி யறிவே—நாட்டிற்
பேத புத்தி நீங்கும்—நாம்
ஒரு குலம்போல் வாழ—எண்ணம்
ஒன்று சேரவேண்டும்—அதற்கே
திருமிகுந்த வீரர்—ஒரு
தேச பாஷை கண்டார்.

ஒன்று பட்டவர்க்கே—தமிழா
உண்மை யின்பம் உண்டாம்.
சென்ற காலமெல்லாம்—நமக்கோர்
தேச பாஷை யின்றித்
துண்டு பட்டு வாழ்ந்தோம்—அந்தத்
துயரந் தீர்ந்த தினிமேல்
வென்று வீறுகொள்ளாய்—கால
வேகந் தன்னைத் தமிழா!

சாதிப் பித்தம் வேண்டாம்—வீண்
சண்டை போட வேண்டாம்.
பேத புத்தி வேண்டாம்—நம்முட்
பிரிவினைகள் வேண்டாம்.
கோதிலாத தூயர்—சொல்லுங்
கொள்கை பற்றி வாழ்வோம்—பிடி
வாதம் செய்திடாமல்—பொது
வாய்மை தன்னை மதிப்போம்.

அன்னியத் தளைகள்—முறிய
ஆண்மை கொண்டு முயல்வோம்
முன்சென் றோங்கு முலகம்—கண்
மூடித் தூங்குவாயோ ?
தொன்மைச் சீர்கள் பேசி—இன்று
தோன்று நன்மை யேசி
இன்னுங் கிணற்றுத் தவளை—போலே
இருப்பதோ நீ தமிழா !

வீட்டைப் பெருமை செய்வோம்—தமிழர்
வீரராக வாழ்வோம்.
நாட்டைப் பெருமை செய்வோம்—கால
நலத்தைப் பேணி வாழ்வோம்
ஏட்டுப் பூச்சி போலே—தமிழர்
இனி யிருக்கலாமோ ?—சிங்கக்
கூட்டம்போல நிற்போம்—ஒரு
குல வுணர்ச்சி கொள்வோம்.

வலிவு மிக்க வேண்டும்—தமிழா
வாழ்வி லின்பம் வேண்டும்
மெலிவு பாப மன்றோ—தமிழா
வேறு பாடு வேண்டாம்.
நலிவிலாத சக்தி—தரும்
நற்பணிகள் செய்வோம்
கலியைச் சாட வல்லோம்—ஆன்மக்
கனலோ டொன்று பட்டால் !



சுவாமி சுத்தானந்த பாரதியார்.

தலை நிமிர் தமிழா—பெற்ற
தாயின் மனங்குளிர.

பதிப்புரை

'ஹிந்தி அவசியமா?' எனும் இந்நூல் நமது பிரசுராலயத்தின் இரண்டாவது வெளியீடாகும். முதல் வெளியீடு ஸ்ரீ சுபாஷ்சந்திரபோஸின் சரிதமாகும். அது வெளிவந்த ஆறுவாரமே இரண்டாம் பதிப்பு வெளியிடும்படி வாய்த்தது.

ஹிந்தியைக் கட்டாயமாய்ப் படிக்க வேண்டுமா என்று சிறப்பாக இத் தமிழ்நாட்டில் பலத்த கிளர்ச்சி இருந்து வருவதை எவரும் மறுக்கமுடியாது. இது ஒத்த சமயத்தில் 'ஹிந்தி அவசியமா?' எனும் இந்நூல் வெளியாகின்றது. ஆதலின், 'ஹிந்தியைப் படிக்கவேண்டியதுதானா?' 'கட்டாயமாய்ப் படிக்கவேண்டுமா' என்பன்ற கேள்விகளுக்குச் சரியான விடைகள் இதில் காணக்கிடக்கின்றன. மற்றும், ஹிந்தி தமிழ்நாட்டில் பரவுவதால் பல தீங்குகள் உண்டெனக் கூறும் கட்சியாரின் வாதங்கள் அத்தனையும் இதில் விவாதிக்கப்பட்டுள்ளன; அக் கட்சியாரின் அறிவுக்கு எட்டாத இன்னும் பல 'இடையூறு'களும் கிளத்தப்பட்டு விடையளிக்கப்படுகின்றன. முக்கியமாக, இவ் விவாதத்தில் அக்கறையில்லாதவர்கள்கூட, மிகுந்த சுவையுடன் படிக்குமாறு அழகான நல்ல தமிழில், ஒரு புதிய மணம் வீசும் நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

நூலாசிரியர் சுவாமி சுத்தானந்த பாரதியார் ஹிந்துஸ்தானி நன்கு படித்தவர். நல்ல விவேகி. சுத்த ஞானி. இவருடைய கட்டுரைகளைக் கடந்த சில நாட்களாய்ப் பல பத்திரிகைகள் வாயிலாய்த் தமிழர் படித்து இன்புற்று வருகின்றனர். ஹிந்துஸ்தானி விவாதத்திலே பாரதியார் கையாண்டுள்ள தருக்க முறை வெகு நேர்த்தியாயிருக்கிறது. தமிழர்கள் ரஸித்து மகிழ்வார்களென்ற உறுதியான நம்பிக்கையுடன்தான் நாங்கள் தமிழுன்னைக்கு இத் தமிழ் நூலைத் தந்துள்ளோம்.

இந்நூலைச் சுருக்கமான காலத்தில் அச்சிட்டுதவிய 'ஜூபிடர்' அச்சுக்கூடத்தாருக்கும், இந்நூலின் ஆக்க வேலையில் ஊக்கந்தந்துதவிய தோழர்: திரிசிரபுரம் அ. காசி விஸ்வநாதன் அவர்கட்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காரைக்குடி,
24—10—38. } போஸ் பிரசுராலயத்தார்.

ஹிந்தி அவசியமா?

1. தமிழர் செய்யவேண்டுவதென்ன?

ஹிந்துஸ்தானி தமிழ் நாட்டில் நுழைந்து இடம் பெற்றது; அதைப்பற்றி பலர் எனது கருத்தைக் கேட்கின்றனர். எனது கருத்தைத் தமிழருக்கு நன்கு விளக்கக் கடமைப்பட்டுளேன். நமது தமிழ்க் கலை வடநாட்டிற்பரவ ஹிந்தி ஒரு சாதனமாகும். உதாரணமாக இராமானந்தர் ஆளவந்தார் சீடர். அவர் ஹிந்தி பயின்று வடநாட்டில் திருவாய்மொழி—இராமாயணப் பிரசாரம் செய்தார். அவர் சீடரே கபீர்தாஸ். அவராலேதான் வடக்கே இராமபக்தி நிலைநின்றது; இராமபக்தி வெள்ளத்திற் பொங்கியெழுந்த ஏராளமான ஹிந்திக் கவிகளுக்கெல்லாம் தென்னாட்டினின்று சென்ற இராமானந்தர் மூலமானார். குமரகுருபரஸ்வாமிகள் ஹிந்துஸ்தானியில் கம்பராமாயணப் பிரசங்கம் செய்து காசியில் தமிழ்ச் சுவை பரப்பினார். அவர் விரிவுரை உருகிக்கேட்டவருள் ஒருவர் துளஸிதாஸ். அதுபோலவே ஹிந்தியின் மூலம் தமிழ்க்கலை வடக்கே பரவ வேண்டும்.

ஹிந்தி வந்தது! தமிழ் எழுந்தது! ஹிந்தி வாலாக்களும் "தமிழ் வாழ்க!" என்று கூவுகின்றனர். ஹிந்தி வேண்டாமென்போரும் "தமிழ் வாழ்க!" என்று ஆர்க்கலிக்கின்றனர். இது எனக்குப் பேரின்பமளிக்கின்றது. இடம் பொருளேவலைச் சீர்தூக்காமல் பெரிய பலங்களுடன் முட்டி மோதிக்கீழே விழ வேண்டா. தோற்பன தொடரேல். "தமிழர் தேசீய பலத்தை எதிர்த்துப்பொருதி விழ்ந்தனர்" என்ற வசை

நமக்கு வேண்டா. ஹிந்தி நடக்கட்டும்; ஹிந்தியைத் தமிழ் ஜீரணித்துப் பல பிமனுக வாழட்டும். சக்தியை யெல்லாம் தமிழை வளர்ப்பதிற் செலவிடுங்கள். இனி நடுநிலையினின்று ஹிந்தி—தமிழ் இயக்கத்தை ஆராய் வோம். இந்த ஆராய்ச்சிக்குச் சிலர் மறுப்பு அனுப்பி கேள்வி கேட்டனர். "தமிழர் செய்ய வேண்டுவ தென்ன?" என்னும் பகுதியில் அவற்றிற்குச் சமாதா னம் சொல்லியுள்ளேன். நாடொப்பன செய்து தமிழர் வாழ்க!

2. பொது மொழி

நமது நாடு பலமொழிச்சிக்கல்களால் வருந்து கின்றது; அதனுல் நமது ஒற்றுமை கெடுகிறது; முன்னேற்றம் தடைப்படுகிறது. நாம் சில ஆண்டு களாக ஆங்கிலத்தை வழங்குகிறேம். அது நமது நாட்டுப் பழக்க வழக்கம் நாகரிகப் பான்மைகளினின் றும் முற்றும் வேறுபட்ட மொழி. அதனின்று நாம் சில உலகியலறிவுபெற்றேம் அவ்வளவுதான். ஆங்கிலம் நமது சமுதாய வாழ்வில் ஊறிக்கலக்க முடியாது; அது நமது இரத்தத்திற்கலந்து உயிர்த்துடிப்பை இயக்க முடியாது.

நமது நாட்டிற்கேற்ற ஒரு பொதுமொழி வேண் டும்; நமது சமுதாயம் அருளுணர்ச்சி பெற்றது; நமது நாகரிகம் உலகிற்கு வழி காட்டவல்லது. அது கீதையையும் திருக்குறளையும் அடிப்படையாகக் கொண்டது. அதன் அருளுணர்ச்சியைப் பாதுகாக்க வேண்டும்; பலசில்லறையாயிருக்கும் நமது சமுதா யத்திற்கு ஒரு கூட்ட வுணர்ச்சியையும், மனவொரு

மைப் பாட்டையும் அளிக்கவேண்டும். மஹரிஷி களால் நமக்கெய்திய அத்யாத்ம ஞானம், திராவிட முனிவராலும், அருட்புலவராலும் நமக்கெய்திய அரு ளுணர்வு, ஜைனபௌத்த சமயங்களால் நமக்கெய்திய அறவுணர்ச்சி, இஸ்லாமிய நாகரிகத்தால் நமக்கெய் திய கலையுணர்ச்சி, கிறிஸ்தவ நாகரிகத்தால் நாம் பெற்ற உலகுணர்ச்சி - இத்தனையும் சேர்ந்த ஒரு பொது நெறியை நோக்கி நமது நாடு சென்றுகொண் டிருக்கிறது. இத்தனை நாகரிகக் கலப்புகளால் நமக் குக் கிடைத்த நன்மையைப் பாதுகாக்கவேண்டும். தீமையையும் வேற்றுமைகளையும் ஒழிக்கவேண்டும். நாம் வேதமார்க்கிகளாயினும், குரான், பைபிள் முத லிய புனித நூல்களைப் பின்பற்றுவோராயினும், நாம் அனைவரும் பாரத ஜாதி; நாம் அனைவரும் ஒரு குலம்; நம்மனைவர் நாடிகளிலும் ஓடுவது ஓர் அன்னையின் இரத்தம் என்று நாம் உணரவேண்டும். அத்தகைய உணர்ச்சியைத் தரக்கூடிய சுதேசி மொழி எது? அது தான் நமது நாட்டிற்குப் பொதுமொழியாகவல்லது. நன்றாகச் சிந்தியுங்கள். இப்போது அத்தகைய மொழி ஹிந்துஸ்தானிதான். இதை யாரும் தடுத்துரைக்க முடியாது.

3. ஹிந்துஸ்தானி

'உன் பாஷை என்ன?' என்று கேட்டால், ஆங்கிலேயன் 'ஆங்கிலம்' என்பான், பிரெஞ்சுக்கா ரன் 'பிரெஞ்சு' என்பான், ஜர்மானியன் 'ஜர்மானியம்' என்பான், இதாலியன் 'இதாலியம்', அராபியன் 'அரபி', சீனன் 'சீனம்', ஜப்பானியன் 'ஜப்பானியம்' என்பான். நமது இந்தியரை உமது தாய்மொழி

எது? என்றால் என்ன சொல்வார்? 'வங்கம், குஜ ராத்தி, இந்தி, மராத்தி, உருது, தமிழ், கன்னடம், மலையாளம்' என்று அவரவர் வீட்டில் பேசும் மொழி களையே சொல்லுவார். "உமது நாட்டில் பேசும் மொழி யென்ன;" என்றால் இதுவரை பதிற் சொல்ல முடியாமல் இருந்தோம்.

இப்போது நாம் "இந்தியராகிய எமது பொது மொழி ஹிந்துஸ்தானி" என்று பொருத்தமாகப் பதிற் சொல்ல வல்லோம். அக்பர் காலம் முதல் ஹிந்துஸ்தானி நமது நாட்டில் வேரூன்றி வளர்ந்து வருகிறது. இஸ்லாமிய நாகரிகம் நமது நாட்டிற் களித்த ஓர் ஒற்றுமைச் செல்வமாக இந்துஸ்தானி விளங்குகிறது. ஹிந்துஸ்தானி பேசுவோர் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர். பதினான்காவது நூற்றாண்டில் இஸ்லாமியர் நமது தமிழகத்திற் புகுந்த னர். சந்தா சாஹெபு, ஹைதர், திப்பு சுல்தான் இம் மூவர் காலத்திலும் ஹிந்துஸ்தானி தென்னாட்டில் இடம்பெற்றது. தமிழ் மொழியிற் பல ஹிந்துஸ்தானி மொழிகள் கலந்துள்ளன. தாலூகாக் கச்சேரி, கோர்ட்டுகள் இவற்றில் வழங்கும் சிறப்பியற் சொற் கள் பெரும்பாலும் ஹிந்துஸ்தானி மொழிகளே. நமது நாட்டில் எந்த ஊருக்குப் போனாலும் ஹிந்துஸ்தானி தெரிந்தவர் சிலர் இருப்பர். குஜராத்திகள், ஐக்கிய மாகாணத்தார், பஞ்சாபிகள், வங்காளிகள், மராத்தி யர், உரியா மொழியினர் அனைவரும் ஹிந்துஸ்தானி பேசினால் நன்கு அறிந்து கொள்ளுவர். வட இந்தி யாவில் அதுவே எக்காலமும், இயல்பான பொது மொழியாக வழங்குகிறது. தென்னாட்டை யெடுத்

துக் கொள்வோம். இங்கே இருப்பவர், தெலுங்கர், கன்னடர், தமிழர், மலேயாளிகள் ஆவர். இவர்களில் தெலுங்கர் ஐதராபாத்திலும் விஜயநகர ராஜ்யத்தி லும் இருக்கின்றனர். ஐதராபாத்திலுள்ளவர்கள் அரச மொழியாகிய இந்துஸ்தானியை உருது எழுத்தில் பயின்று தீரவேண்டும். அதனால் அவர்களுக்கு இயல்பாக இந்துஸ்தானி தெரிந்திருக்கிறது. நான் ஐதராபாத்தில் சிலகாலம் இருந்தேன். அப்போது தெலுங்கு தெரியாத பலரை நான் பார்த்தேன். நான் சந்தித்தவர்களெல்லாம் இந்துஸ்தானி நன்றாகத் தெரிந்தவராயிருந்தனர். நான் கோதாவரி கிருஷ்ணு தீரங்களிற் சிலகாலம் தவம் புரிந்தேன். அக்காலம் தெலுங்கு தேசத்தில் இந்திபேசுவோர் பலரை நான் சந்தித்திருக்கிறேன். ஆந்திர தேசத்தில் இந்துஸ்தானியின் வேகம் விரைவாகப் பரவிவருகிறது. மைசூர் பங்களூர் முதலிய கன்னட தேசங்களில் நான் வேண்டுமட்டும் சுற்றியிருக்கிறேன். இந்துஸ்தானி பேசினால் அங்கே சாதாரணமாகப்புரிந்து கொள்ளுகிறார்கள். பள்ளிக்கூட மாணவருக்கு அங்கு உருது ஓர் இஷ்டபாடமாக இன்றும் விளங்குகிறது. மைசூர் ஒரு காலத்தில் திப்பு சுல்தான் ஆட்சியிலிருந்ததால், அங்கு இந்துஸ்தானிக்கு ஓர் இடம் ஏற்பட்டு விட்டது. கன்னியாகுமரி முதல் கொச்சி வரை மலேயாளப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். அங்கு ஆரிய மொழியின் வேகம் வெகு தீவிரமாகப் பரவியுள்ளது. பாதிக்குப்பாதி வடமொழி கலந்த இந்தியை மலேயாளிகள் ஓடுகிற ஓட்டத்தில் கற்றுக்கொள்வார்கள். இப்போதே அங்கு இந்தி பேசுவோர் தொகை அதிகமாகி

வருகிறது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில், வங்கம், மராதி, குஜராதி முதலிய வடநாட்டு மொழிகள் போன்ற ஏராளமான வட சொற்கள் விரவியிருக்கின்றன. ஆதலால் அவர்கள் இந்தியை வெகு எளிதிற் கற்கின்றனர். இந்தி உச்சரிப்பு அவர்களுக்கு எத்தகைய வருத்தமும் தருவதில்லை.

4. தமிழும் ஹிந்தியும்

இனித் தமிழ்நாட்டு நிலைமை என்ன? பாரத மாதாவின் புதல்வர் 17 பேர் ஒரு பொது மொழியைப் பயிலுகின்றனர், பதினெட்டாவது புதல்வன் ஒருவன் மட்டும் அதற்கு எதிர் செய்வதிற் பயனென்ன? "நாடொப்பனசெய், தேசத்தோடொத்து வாழ்"-என்னும் ஔவை மொழிகளை உன்னுக. இராணி மீனாட்சி காலத்தில் சந்தா சாஹெபு மதுரையைப்படையெடுத்துப் பிடித்துக்கொண்டான். அக்காலம்முதல் மதுரை, திருச்சி, எல்லாம் ஆற்காட்டு நவாபு தர்பாரில் இருந்தன. அக்காலத்தில் நமது தமிழகத்தில் ஹிந்துஸ்தானி பரவத்தொடங்கியது. தமிழகத்தில் உள்ள இஸ்லாமியர் பெரும்பாலும் ஹிந்துஸ்தானி பேசுகின்றனர். 1919-ம் ஆண்டு முதல் நமது தமிழகத்தில் ஹிந்திப் பிரசாரம் நடந்துவருகிறது. ஆண்டுதோறும் நூற்றுக் கணக்கான தமிழர் ஹிந்துஸ்தானி படித்துப் பரீட்சை கொடுத்து வருகின்றனர். ஹிந்துஸ்தானியின் வேகம் நாளுக்குநாள் நெறிகட்டி ஏறுகிறது. இதை யாரால் தடுக்கமுடியும்?

நமது நாட்டிற்குப் பொதுமொழி ஹிந்தியே என்று முதல் முதல் கண்டுபிடித்தவர் ஒரு மஹான்.

ஸ்ரீ ராமதீர்த்த பரமஹம்ஸரை அறியாதார் உலகி லில்லை. அவர்தான் "ஹிந்தியை எல்லாரும் கற்றுக் கொள்ளுங்கள்; அது வெகு விரைவில் நமது நாட்டுப் பொதுமொழியாகப் போகிறது" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார். அவர் ஹிந்தியில் அருமை யான நூல்கள் எழுதியிருக்கிறார். அவருக்கு முன்பே நமது இந்திய வீரனாகிய சிவாஜி சத்திரபதி ஹிந்தி யைத் தனது அரசியல் மொழியாக்கினான். மஹான் சமர்த்தகுரு ராமதாஸரின் தீர்க்கதரிசனங்களில் ஒன்று ஹிந்தியின் பொதுமை.

நமது விடுதலைக் கிளர்ச்சியின் ஆரம்பத்தில் ஆங் கிலமே பொதுவான மேடை மொழியாக வழங்கியது. பர்க்கு, ஷெரிடன், கிளாட்ஸ்டன் மெக்காலே ஆகிய முதல்தரமான ஆங்கில நாவலர் போன்றே நமது தாதாபாய், சுரேந்திரநாதர், திலகர், பால், லாலாஜி முதலிய தேசிய வீரர் ஆங்கிலம் பேசிவந்தனர். விவே கானந்தச் சிங்கம் ஆங்கிலத்திலேயே வேதாந்த முழக்கம் செய்தது. கீதை, உபநிடதம், இராமாயணம் பாகவதம் போன்ற நமது நாட்டுப் புண்ணிய நூல் களைக்கூட நாம் ஆங்கில மொழி பெயர்ப்பின் மூலமே படித்துவந்தோம். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலம் பேசுவதையே ஒரு நாகரிகமாக நம் நாட்டி னர் கருதினர்.

திடீரென்று 1915-ம் ஆண்டு நம்மவருக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது; 'நாம் எத்தனை நாள் அன்னிய மொழியே பேசிப் பெருமை கொள்வது? நமக்கென ஒரு மொழி வேண்டாமா' என்ற எண்ண

மெழுந்தது. அந்த ஆண்டு முதல் நமது நாட்டின் அரசியல் வாழ்வில் ஒரு புதுமை தோன்றியது. 1916-18-ல் பெசண்டம்மையின் ஹோம் ரூல் கிளர்ச்சி பலமாயெழுந்தது. அப்போதுதான் நம் நாட்டறிஞர் பொதுமொழியில் கருத்தூன்றத் தொடங்கினர். அப்போதுதான் எளிதான ஹிந்தி அரிச்சுவடிகள் தமிழரிடையே பரவத் தொடங்கின. அதன்பின் தக்ஷிண பாரத ஹிந்திப் பிரசாரசபை மஹாத்மாவின் ஆசியால் ஏற்பட்டது. அது தனது தீவிரமான முயற்சியால் இதுகாறும் சுமார் 2 லக்ஷம் பேருக்கு ஹிந்தி புகட்டியுள்ளது. காங்கிரஸ் ஆட்சி வந்ததும் ஹிந்தி மின்சார வேகத்தில் பரவிவருகிறது! நமது தமிழ்நாட்டை நாயக்கர் ஆண்டபோது தெலுங்கு பரவியது; இஸ்லாமியர் ஆண்டபோது ஹிந்துஸ்தானி பரவியது. ஆங்கிலேயர் ஆளும்போது ஆங்கிலம் பரவியது. இனிக் காலசக்கிரம்மாறும்; நமது நாடு விடுதலைபெறும். அப்போது அரசியல் பொதுமொழி ஹிந்துஸ்தானியாகும்.

5. ஹிந்தி யனுபவம்

இந்தி கற்பது எளிது; எனது அனுபவத்தைச் சொல்லுகிறேன்: நான் வளர்ந்த ஊரில் மஸ்தான் சாஹெப் என்ற ஒரு ஸூஃபி ஞானியிருந்தார். அவர் யாருடனும் பேசுவதில்லை; தம்முடன் தாமே பேசுவார். சுடுகாடுகளில் திரிவார்; சில சமயம் பெண் வேஷமும் போட்டுக்கொண்டிருப்பார். ஏதாயினும் கேட்டால் இடியிடி யென்று சிரிப்பார். பசித்தால் எதிரே கிடந்ததை யுண்டு "ஹூம், சலோ!" என்று ஓடிப் போவார். துறவிகளைத் தேடித் திரியும் எனக்கு

இவர் ஒரு சிறந்த ஞானி எனப்பட்டது. அவரை விடாது தொடர்ந்தேன். என் வீட்டில் ஏதாயினும் பணிகாரம் கொடுத்தால் ஒளித்துக் கொண்டுபோய் அவருக்குத் தருவேன். அப்படியே அவருடன் சிநேகம் செய்துகொண்டேன். இரவில் சிநேகிதர் வீட்டுக்குப் படிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு அந்த மஸ்தானிருக்கும் ருத்ர பூமிக்கு நேராகச் செல்வேன். அவர் பரமயோகி; பெரிய தமிழ் வித்துவான்; உருதுவில் அரிய புலவர். இரவு 8 மணி முதல் 12 மணி வரை அவர் ஏகாந்தமாயிருந்து உருக்கமாகப் பாடுவார்; குரான் பாசுரங்களைப் பாடித் தொழுவார்; குணங்குடி மஸ்தான் சாஹெபு பாடல்களை உருக்கமாகப் பாடுவார். கபீர்தாஸ் ரவிதாஸ் முதலிய அருட்புலவர் பாடல்களைப் பாடி எனக்குப் பொருள் விளக்கி முடிவில் "ஹிந்துஸ்தானி ஸீக்னுசாஹியே பாய்! ஜரூர்ஸீகோ!" என்று எனது தொடையில் ஒரு கிள்ளுக் கிள்ளித் தவடையில் மெல்ல ஒரு அடி போடுவார். "தாங்களே கற்றுக்கொடுங்கள்" என்பேன். "டஹரோ! உஸ்தாத் ஆதேஹைஹங்" (சற்று நில்; உபாத்தியாயர் வருகிறார்) என்பார்—சற்று மறைந்து சென்று மீண்டும் "போலோ ஹம் க்யா கர்தேஹைஹங்!" "ஹம் ஆப்கோ பார்தே ஹைஹங்" என்று ஒரு செல்ல அடி போடுவார். பிறகு "சலோ, பைடோ, தௌடோ! லௌட்ஆவோ, கடோ, பிரோ, போலோ சுப்ரகோ! ஆராம்ஸே பைடோ" என்று என்னைக் கபாத்துவாங்கி அவஸ்தை பண்ணுவார். அதன் பிறகு ஸூபி ஸாதி, ஹபீஸ் முதலிய பாரஸிகப் புலவர் வாக்குகளைச் சொல்லி விளக்குவார். ஒரு

நாளைக்கு அவரிடம் 10, 15 வார்த்தைகளை விளை யாட்டாகக் கற்றுக்கொள்வேன். அவரிடம் கற்ற வேதாந்த ஞானம் அளப்பரிது. ஆறு மாதம் என் னுடன் இவ்வாறு விளையாடி ஒரு நாள் அவர் எங் கேயோ போய்விட்டார். அது முதல் இந்துஸ்தானி படிக்கவேண்டும் என்ற ஓர் ஆவல் எனக்கு உதித் தது. எனது தமையனார் 1915-ம் ஆண்டு லக்னோ காங்கிரஸிற்குப் போய் வந்தார். அவர் பெரிய தேசாபிமானி; தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, வட மொழி முதலியவற்றில் அவருக்கு நல்ல புலமை உண்டு; அத்துடன் அவர் சங்கீதப் புலவர். அவர் லக்னோவிலிருந்து ஹிந்திப் பாட்டுப் புஸ்தகம் வாங்கி வந்தார். தமது வக்கீல் தொழிலுக்குரிய அலுவல்கள் முடிந்த நேரமெல்லாம் காங்கிரஸ் பேச்சும், ஹிந்திப் பாடலும்தான். அவர்தான் எங்கள் ஊரில் முதல் முதல் ஹிந்தி கற்கத் தொடங்கியவர்.

அவர் இரவில் ஹிந்தி வார்த்தைகளை உரக்கச் சொல்லி மனப்பாடம் செய்வார். அவற்றை நான் மௌனமாக மறைவிலிருந்தே கற்றுக்கொண்டு தனி யாகச் சென்று மனனம் செய்துகொள்வேன். நான் திருச்சி ஜில்லாவில் உபாத்தியாயர் வேலை பார்த்த போது வாஜிபேயர் என்னும் வடநாட்டுப்புலவர் ஹிந் திக்காக அரிய தொண்டு செய்துவந்தார். அவர் எழு திய ஹிந்தீகாஹிர் (ஹிந்தியின் சாரம்) என்பதே நான் முதன் முதலில் முறையாகப் படித்த நூல். நான் அமர்ந்த ஹைஸ்கூலில் ஹிந்தியைப் பாடம் வைக்கும் படி உபாத்தியாயர் சபையில் நீளப்பேசிக் கிளர்ச்சி செய்தேன். அதன் பயனாக உள்ளூரில் உள்ள ஓர் உஸ்

தாதைக் கொண்டு உபாத்தியாயர்கள் ஹிந்துஸ்தானி சொல்லிக்கொண்டோம். எங்கள் தலைமை உபாத்தி யாயர் இரங்கோனில் இருந்தவர். அவர் வ. வே. சு. ஐயரின் அரிய நண்பர். அவருக்கு ஹிந்துஸ்தானி நன்ருகத் தெரியும். சங்கீதத்திலும் அவர் நிபுணர். பள்ளிக் கூடம் விட்டதும் குறிப்பிட்ட நண்பர் சிலர் அவர் வீட்டிற் கூடுவோம். ஒரு மணிநேரம் சங்கீதம் நடக்கும். அரைமணி நேரம் ஹிந்துஸ்தானிப் பேச்சு நடக்கும். அதன்பிறகு நான் ஒரு ஹிந்திப்பிரசாரகரிடம் பயின்று பரீட்சை கொடுத்துத் தேறினேன். தமிழ்க் குருகுலத்தில் இருக்கும்போது துளசிதாஸ், மேவாட் பதன், குருகோவிந்த் பிரேம்சந்திரர் நாவல்கள் முதலிய அரிய ஹிந்தி இலக்கியங்களைப் பயின்றேன். தஞ்சை 'சமரஸ போதினி'யை நடத்தியபோது ஓர் அரிய ஹிந்திப் புலவர் என்னைப் பண்டித பரிட்சைக்குப் பயிற்றுவித்தார். முதல் முதல் தமிழ்ப் பத்திரிகைகளில் நான் ஒவ்வொரு பக்கம் ஹிந்தி எழுதி வந்தேன். அதன்பின் பொதுநலப் பணியும் தீவிரயோகப்பயிற்சியும் மேற்கொண்டதால் பரீட்சை கொடுக்கமுடியாமற் போயிற்று. சென்னையில் ஹிந்தி பேசும் நண்பருடன் இருந்ததால் புத்தகப் படிப்பு வாழ்வில் பயனுனது. இவ் வரலாறு எதற்குச் சொன்னதென்றால் முதலில் ஹிந்தி சப்தங்களைக் கேட்டுப் பேச்சுப் பழகிப் பிறகு புத்தகம் படித்தால் பாஷை எளிதாக வரும் என்பதைக் குறிக்கவே.

இவ்வாறு ஹிந்தி பயின்றதால் எனது தமிழ் எள்ளளவும் கெடவில்லை. அதற்குப்பதிலாக இந்தியைப் போலத் தமிழை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வக்

கனல் பிறந்தது. இந்திக் கதைகள் போலத் தமிழில் எழுத எழுச்சி பிறந்தது. இந்தியை வெறுப்பதல்ல, எதிர்ப்பதல்ல, தமிழை உறுதியாக நின்று வளர்ப்பதே தமிழர் கடமை. துளசிதாஸ், கபீர், நானகர், சூர்தாஸ் முதலிய பழைய புலவர் மணிகள் உலகிலேயே புகழ் பெற்று விளங்குகின்றனர். சென்ற 20 ஆண்டுகளாக இந்தியில் பல புலவர் மணிகள் எழுந்து விளங்குகின்ற னர். கல்யாண பத்திரிகையின் ஆண்டு மலரைப் பார்த் தால் இந்தி எவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கிறதென்று தமிழர் அறிவர். 20 ஆண்டுகளில் ஒரு நூற்றாண்டுக் குரிய காரியத்தை இந்தி சாதித்திருக்கிறது.

6. தமிழ் வளர்த்த தமிழர்

தமிழர் என்ன செய்தனர்? மூவேந்தர் காலத் தில் அதுவும் கரிகால் வளவன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் இம் மூவர் காலத்திலும் தமிழ்க்கலை உச்சநிலையடைந்திருந்தது. அது இரண்டாம் நூற் றாண்டு. அதன் பிறகு 7, 8, 9 வது நூற்றாண்டு களில் ஆழ்வார்கள், நாயன்மார்கள், கம்பர், புகழேந்தி, வில்லிபுத்தூரார் போன்ற புலவர் தோன் றிக் கவிவளர்த்தனர். அன்றும் தமிழ் உரைநடை வளர்ச்சி பெறுமலிருந்தது. 20-வது நூற்றாண்டிலே தான் தேசிய இயக்கத்தின் தீவிரத்தால் தமிழ் புதுமை பெற்றது; உரைநடையும் பேச்சு நடையும் ஆக்கம் பெற்றன. பாரத நாட்டிலெழுந்த சுதந்திர தாகமே தமிழையும் வளர்த்தது என்பது மிகையல்ல. ஜி. சுப்பிரமணிய ஐயர், சுப்பிரமணிய பாரதி, வ. வெ. சுப்பிரமணிய ஐயர், சுப்பிரமணிய சிவா, சிதம்

பரம் பிள்ளை, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், சத்தியமூர்த்தி, எ. அரங்கசாமி ஐயங்கார், ராஜாஜி முதலிய தேசிய வீரர் பேச்சாலும், எழுத்து வன்மையாலும், பொதுஜனங்களிடையே தமிழறிவு பரவிப் புதிய விழிப்பைத் தந்தது. இவரால் தமிழரிடையே புதிய எண்ணங்கள் பரவின. இக்காலம் ஆங்காங்குச் சங்கங்கள் நிறுவிப் பழந்தமிழை வளர்த்த பெரியாரையும் நாம் மறக்கக்கூடாது. பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரைத் தேவர், ஆறுமுக நாவலர், டாக்டர் சாமிநாதய்யர், சுவாமி வேதாசலம், இராகவையங்கார், நமச்சிவாய முதலியார், செல்வகேசவ ராயர், அனவரதவிநாயகம் பிள்ளை, சடகோபராமானுஜர், சூரிய நாராயணய்யர், கா. சுப்பிரமணிய பிள்ளை, உமாமகேசுரம்பிள்ளை, மாணிக்க நாயக்கர், வடிவேலு செட்டியார், பண்டித கோபாலகிருஷ்ணய்யர், திரு. நாராயணய்யங்கார், குமாரசாமிப் புலவர், வையாபுரி பிள்ளை, சுவாமி விபுலானந்தர் முதலிய புலவர் மணிகளைத் தமிழ் நலம் கருதுவோர் யாவரும் மறக்க முடியாது. எப்படியோ தமிழுக்கு ஒரு புதிய விழிப்பு வந்தது.

இன்று ஹிந்தி பள்ளிக்கூடத்தில் நுழைந்ததும் தமிழுக்கு ஒரு மின்சார சக்தி வந்துவிட்டது.

7. தமிழின் பழமை

வடமொழி, தென்மொழி, ஹீப்ரு, அரபி, லத்தீன், கிரேக் இவை உலகின் தொல்பெரு மொழிகள். இவற்றில் இன்று மிகுதியாகப் பேச்சு வழக்கில் இருப்பது தமிழே. நமது பாரதநாட்டின் முன்மொழி

தமிழ் தான். இதை யாரும் மறுக்க முடியாது. ஒரு காலம் தமிழ் நமது நாடு முழுதும் பரவி யிருந்தது; நமது தமிழ் வேந்தர் பெரிய சாம்ராஜ்யங்களை ஆண்டனர். திருமாவளவன், நெடுஞ்செழியன், இளஞ்செழியன், செங்குட்டுவன், ராஜ ராஜ சோழன் முதலிய தமிழ் மன்னர் தமிழ் சாம்ராஜ்யங்களை நிலைநாட்டி, அசோகன், அக்பர், அகுஸ்தன் போன்று பெருமை பெற்று ஆண்டனர். 8-வது நூற்றாண்டு முதல் 14-வது நூற்றாண்டு மட்டும் தமிழ் மன்னர் உள்நாட்டுப்போரிலேயே கருத்தூன்றினர். தமது புகழ் பாடும் கவிகளுக்குப் பரிசில் வழங்குவதுண்டு. அவ்வளவுதான். மற்றப்படிப் பொதுஜனங்களுக்குத் தமிழ்க்கல்வி போதிய வளர்ச்சி பெறவில்லை. அது இலக்கணம், நிகண்டு, குறள், கம்பன்—அனைத்தையும் ஓலைச்சுவடி தேடி எழுத்தாணியால் எழுதிப் படிக்க வேண்டிய காலமாயிருந்தது. நாம் இன்றுச் சங்கநூல்களைப் புத்தகவடிவில் படிக்கிறோம்; அவ்வாறு இயலச்செய்தவர் நமது தமிழ்ப் பெரியாராகிய நாவலரும், டாக்டர் சாமிநாதையருமே யாவர். 14-வது நூற்றாண்டில் இஸ்லாமியப் படையெடுப்பு வந்தது; சில்லறைப் போர்களால் நாட்டின் அமைதி குலைந்தது. 15-வது நூற்றாண்டின் நடுவே நாயக்கராட்சி வந்தது. நமது தமிழர் தெலுங்கும் கற்கவேண்டியிருந்தது. அக்காலம் தெலுங்குப் பாட்டுக்களே அதிகம்; தெலுங்கு படித்தால் நாக்குத் திருந்தும் என்ற ஒரு நம்பிக்கையும் இருந்தது. பெண்ணைக் கொடுப்போர் மாப்பிள்ளைக்குக் 'கிரந்தம் தெலுங்கு இவை தெரியுமா' என்று கேட்பர். 1735ம் ஆண்டு நாயக்கராட்சி

முடிந்து மீண்டும் ஆர்க்காட்டு நவாப்பாட்சி வந்தது. 17-வது நூற்றாண்டின் இறுதியில் மராத்தியப் படையெடுப்புவந்தது. நமது தமிழ்நாட்டுப் பாகவதர்கள் செய்யும் கதா காலட்சேபங்களைப் பார்த்தால் நாம் எத்தனை மொழிகளைப் பயின்றிருக்கிறோம் என்று தெரியும். ஆரியம், தெலுங்கு, மஹாராஷ்டிரம், இந்தி, தமிழ் இந்த ஐந்து மொழிகளும் நமது தமிழகத்தில் வழங்கிவந்தன. இவ்வாறு அரசியல் கிளர்ச்சிகளாலும் பல மொழிகள் முட்டுதலாலும், தமிழர் புறக்கணிப்பாலும் தமிழ் வளங்குன்றி யிருந்தபோது, ஆங்கிலமும் வந்து புகுந்தது. ஆங்கிலம் படித்தவர் தமிழிற் பேசுவதுகூட இழிவென்று நினைத்தனர். தமிழ்த் தம்பிக்குத் தமிழ்த் தமயன் ஆங்கிலத்திற் கடிதம் எழுதி வந்தான். நானும் அந்தக் குற்றத்திற்கு ஆளாயிருந்தேன். பள்ளிக்கூடங்களில் ஆங்கில எண்ணங்களே மிகுந்தன. நமது அறிஞர் ஆங்கிலத்தில் நினைத்துத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினர்.

இச்சமயம் சமயச் சஞ்சீவிபோல நாட்டியக்கம் தோன்றியது; தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றின. நமது புதிய எண்ணங்களை விளக்கப் புதிய புதிய தமிழ்ப் பதங்களை உபயோகித்தோம். அவ்வாறே தமிழ் விரிவடைந்து இன்று பொதுஜனங்களிடையே விரிந்து பரவிவருகிறது.

8. தமிழின் பெருமை

நமது நாட்டில் பொதுமொழியாக வழங்க உரிமையுள்ளது தமிழ். அது 30 எழுத்துக்களில் முற்ற முடிந்த மொழி; இலக்கண வரம்புள்ளது; கற்

பதற்கு எளிதானது; சில சொற்களில் பல பொருளை யுணர்த்த வல்லது; இந்தி, உருது, பிரெஞ்சு, லத்தீன், ஆரியம் முதலிய மொழிகளில் அஃறிணைப் பெயர்களுக்கெல்லாம் ஆண்பால் பெண்பால் கண்டு பிடித்துக்கொண்டிருப்பது மகா தொல்லை. அத் தொல்லையில்லாதன வங்கம், ஆங்கிலம், தமிழ்—இம் மூன்றும். நமது இந்திய மொழிகளில் தமிழுக்கே முதல் முதல் கையச்சு (Type-writing) ஏற்பட்டுள்ளது. தமிழில் பழஞ்செல்வம் அதிகம். சங்க இலக்கியங்கள் தமிழின் பெருமையையும் தமிழர் பெருமையையும் விளக்கும். தமிழ் 'ஹம் ஹூ ஹாம்' என்று மூச்சைப் பிடுங்காமல் குறைந்த மூச்சுச் செலவுள்ளது. ஆரியத்திற்கு இணையான அருட் செல்வங்கொண்டது தமிழ்; ஆங்கிலத்திற்கு இணையான கவிச் செல்வங் கொண்டது தமிழ். மற்ற இந்திய மொழியினும் தமிழ் அதிக நெகிழ்ச்சியுள்ளது. மேனாட்டு இயற் கலையைத் தமிழில் எளிதாக விளக்கமுடியும். தொல் காப்பியம், திருக்குறள், புறநானூறு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப ராமாயணம், பெரிய புராணம், திருவாய் மொழி, தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், ஔவை குறள், தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல், அருட்பா போன்ற இணையற்ற இலக்கியச் செல்வங்கொண்டது தமிழ். தற்காலத்தில் இளம் பொலிவுடன் வழங்கும் தொன்மொழி தமிழே. தமிழ் பல மொழிகளுக்குத் தாய் மொழியாவது. தமிழ் நம் நாட்டுக்குப் பொதுமொழியாக வர உரிமையுண்டு. ஏனெனில் அது முன்பே நிலத்திற்குரிய மொழி.

9. உரிமையை உணர்வாய் !

ஆனால் தமிழர் தமது உரிமையை உணரவில்லை. வீடு கொள்ளைபோனபிறகு "கூ கூ" என்றால் பயனென்ன ? வடநாட்டார் தமது மொழியைப்பேணி வளர்த்தனர். எலிஜபெத்து காலம் முதல் விக்டோரியா காலம் மட்டும் ஆங்கிலம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உலக வாழ்விற்கே ஓர் இன்றியமையாத சாதனமாய் விட்டது. இந்தியாவிற்கும் அதுவே பொது மொழியாகத்தகும் என்பாரும் உளர். நானும் அவ்வாறு நினைத்த காலமும் உண்டு. ஆங்கிலமேன்? இந்தி ஏன்? தமிழேன் பொதுமொழியாகக்கூடாது என்று என் மனச்சாட்சி கேள்வி கேட்கிறது! தமிழே, உனக்கு இவ்வளவு பெருமையும் உரிமையும் இருக்கும்போது நீ மூலையில் ஒதுங்கி நிற்பதேன்? என்று என் உள்ளம் கேட்கிறது. இன்று தமிழன்னை என்ன சொல்லுகிறாள்? "அப்பனே வீண் கூச்சல் போட்டென்ன பயன்? வெள்ளம் வருமுன்பு கல்லணை போட்டிருக்க வேண்டும்; வெள்ளம் வந்த பிறகு கையணை போட்டால் நிற்குமா? எனக்கு உரிமையுள்ளது; பெருமையுள்ளது; சரிதான்; ஆள் வலிமையில்லையே; எனது சொந்த மைந்தரே சாதிப்பிளவும் வசைபுராணமுமாயிருக்கும்போது நாட்டில் யார் என்னை மதிப்பர்? திருப்பதிக்கு வடக்கே சென்று நான் இந்தியாவுக்குப் பொது மொழி என்றால், "ஏமிராஅ!" என்று வருவர் ஆந்திரர்; மைசூருக்குப் போய் நான் பொது மொழியென்றால் "ஏனு ஹேளுதாரு?!!" என்று கன்னடர் வியந்து நகைப்பர்; எனது கலப்புடைய மலையாளத்திற்குப்போனால் "எங்களுக்கு

அது சம்மதமல்ல!!!" என்று விரட்டுவர். வடக்கே போனால் "பீசே சலோ" என்பர். இன்றுள்ள நிலைமையில் நான் பொதுமொழியாவதெப்படி?" என்கிறாள் தமிழ்த்தாய். தமிழ், வடமொழி, வங்கம் எல்லாம் வளர்ச்சி பெற்ற அரியமொழிகளே. அவை நமது நாட்டுப் பொதுமொழியாக முடியா. ஆனால் தமிழர் மனங்குன்றக்கூடாது. இன்று எழுந்த தமிழ் வேகத்தைத் தூண்டவேண்டும், கலைவளர்ச்சியிற் கருத்தூன்ற வேண்டும். பகையும் பொறாமையுங்கொண்டு சக்களத்திப் போராட்டம் செய்வதில் ஒரு பயனுமில்லை. உரிமையை உணர்க! தமிழைப் பெருமை செய்க!

10. ஹிந்துஸ்தானி

இந்துஸ்தானி ஏன் பொதுமொழியானது? (1.) நாட்டிற் பெரும்பாலார் அதைப் பேசுகின்றனர். (2.) நமது நாட்டில் அது நன்கு ஊன்றிக்கொண்டது. (3.) அதைக் கருத்தூன்றி நாட்டார் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக வளர்த்து வருகின்றனர். (4.) அரபி, பார்ஸி, ப்ராக்ருதம், வடமொழி இத்தனையும் கலந்த கதம்பம் இந்துஸ்தானி. இப்போது அது இன்றியமையாத ஆங்கில மொழிகளையும் தன்னுட்கொண்டு ஒவ்வொரு நாளும் ஜீவசக்தி அதிகரித்து வருகிறது. (5.) இந்துஸ்தானி கற்பதற்கு மிகவும் எளியது; இலக்கண விதிகள் மிகச் சுருக்கம். (6.) அம்மொழி வளர்ச்சிக்கென்றே மேனாட்டு முறையில் பெரிய கழகங்கள் நிறுவி வடநாட்டார் அரியபெரியகலைப்பணி செய்கின்றனர். இந்தி நூல்கள் அருவிபோல ஒவ்வொரு நாளும் வெளிவந்து குவிகின்றன. (7.) இந்தியர் இந்தியிலேயே பேசுவர். எழுதுவர். சென்னைக் காங்கிரஸில் ஜவஹ

ரும், கோகலே ஹால் கூட்டத்தில் மாளவியாவும், பி. வி. ரேயும் இந்துஸ்தானியிலேயே பேசினர். அவர்து தாய்மொழிப் பற்று அவ்வாறுள்ளது. (8) ஒவ்வொரு நாளும் தமது மொழியிலுள்ள குறைகளை நிறைவுறுத்த இந்துஸ்தானி ப்ரேமிகள் அயராதுழைக்கின்றனர்; தமது நாவலரையும் பாவலரையும் நன்கு மதித்துப் போற்றுகின்றனர்; தமது கவிகளுக்கு ஜயந்தி உத்ஸவம் கொண்டாடுகின்றனர்; இந்துஸ்தானியில் எழுதப்பெற்ற நல்ல நூல்களைப் பிறமொழிகளிற் பெயர்த்து உலகில் தமது மொழிப் பெருமையைப் பரப்புகின்றனர்; துளஸிதாஸ் ராமாயணம் போன்ற அரிய நூல்களை இலட்சக்கணக்காக அச்சிட்டு அடக்க விலைக்கே விற்று அறிவைப்பரப்புகின்றனர். (9) ஏராளமான இந்திப் பத்திரிகைகள் படப்பொலிவுடன் வெளிவருகின்றன. அரிய அறிவாளரைக்கொண்டு அவற்றில் விஷயதானம் செய்யச் சொல்லுகின்றனர்; "மஹராஜ் நமஸ்தே! கிருபைசெய்து இன்ன விஷயத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியுதவுங்கள்" என்று எழுதி எழுத்தாளரை ஊக்குகின்றனர். ஒருவர் கட்டுரை யனுப்பினுல், அதை வெளியிட்டதும் பத்திரிகையுடன் சில கட்டுரைப் பிரதிகளும் வைத்து 'தாங்கள் எழுதிய கட்டுரைக்கு மிகவும் வந்தனம். அதற்காக ஏதோ எங்களாலான சன்மானம் அனுப்பி யிருக்கிரோம். தங்கள் அன்பு எங்கள்பா லிருக்கவேண்டும். தங்கள் அரிய கட்டுரைகள் எங்கள் வாசகருக்கு அடிக்கடி கிடைக்கும்படி பெரிய மனது செய்யவேண்டும்' என்று இனிய மொழிகளால் நன்றி செலுத்துகின்றனர் வடநாட்டுப் பத்திராதிபர். வடநாட்டுப் பத்திரி

கைகளில் வசை புராணமும், சுயநலக்கோட்டையும், மஞ்சட் காமாலையும் சொற்கொலையும் மருந்திற்குக் கூடக் கிடையா. அங்கு மிகவும் அரிய விஷயங்களைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. கல்யாண யோகாங்கம், சிதாங்கம், வேதாங்கம் முதலியவற்றைத் தமிழர் பார்க்கவேண்டும். (10) தமது கவிகளை வடநாட்டார் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். ஒரு தாகூர் தம்மிடையே உதித்தால், அவர் கவிகளைப் பன்மொழிகளிலும் பெயர்த்து வெளியிட்டு உலகப்புகழ் தேடுகின்றனர். கவிகள் உயிரோடிருக்கும்போதே வடநாட்டார் ஆதரிக்கின்றனர். சிறந்த நாவல்களையும் நாடகங்களையும் உருக்குலைக்காமல் அப்படியே நாடகமேடையிலும், பேசும்படத்திலும் காட்டி மொழி நயத்தைப் பொதுஜனங்களும் ரசிக்கச் செய்கின்றனர். (11) பிறமொழிகளில் உள்ள புதுமைகளெல்லாம் இந்தியில் தக்காரைக்கொண்டு மொழிபெயர்க்கின்றனர். (12) வடநாட்டில் பொதுக்கூட்டத்தில் "Sisters and Brothers" என்று எந்தத் தலைவராவது வாயைத் திறந்தால் "போலோ இந்தி, இந்தி" என்று கடலலைபோலக் கூச்சலிடுவர். நமது சென்னைக் கடற்கரையில் பத்தாண்டுகளுக்கு முன்புகூட "ஆங்கிலம், ஆங்கிலம்" என்று கூச்சலிடுவதைக் கேட்டிருக்கிறோம். (13) வடநாட்டில் கட்டுப்பாடு அதிகம். ஒற்றுமை மிகுதி. ஓர் இயக்கம் பொதுஜன சம்மதம் பெற்றுவிட்டால், அதைப் பொறுமைகொண்டு தாக்காமல் கீழ்ப்படிவர். உதாரணமாக சென்ற ஆண்டு காங்கரஸ் மந்திரி வேலை ஏற்கக்கூடாதென்று பண்டித ஜவஹர், பண்டிதை விஜயலக்ஷ்மி முதலியோர் பலமாக

ஆட்சேபித்து இந்துஸ்தானியில் சக்கையாக வெளுத்து வாங்கினர். மந்திரி பதவியேற்கக் காங்கரஸ் கூட்டம் சம்மதித்ததும் பொதுஜன அபிப்பிராயத்திற்குத் தலைவணங்கினர். விஜயலக்ஷ்மி பண்டிதையே மந்திரி பதவி யேற்முர். நமது தமிழகத்தில் நாட்டிற்குரிய ஒரு நன்மையை யாராயினும் செய்தால், சிலர் அது அவர் சூழ்ச்சி, இவர் சூழ்ச்சி, ஹூ-கிளம்பு என்று கச்சைகட்டித் தொல்லைசெய்து வசை புராணம் பாடுவதைக் கேட்கிறோம். எதற்கெடுத்தாலும் "பார்ப்பான்" மண்டையை உருட்டுகின்றனர்! இந்த மஞ்சட் காமாலை ஒழியவேண்டும். சாதி மதம் என்பதல்ல; இப்போது தகுதி பார்த்தே ஒருவருக்கு ஒரு பொறுப்பைத் தருகிறது காங்கிரஸ். உதாரணமாக சுகாதார மந்திரி பதவிக்கு டாக்டர் ராஜனைத் தேர்ந்தெடுத்தது அவர் தகுதியைக் குறித்தேயாம்.

மொழிப்பற்று, பொதுநலவுணர்ச்சி, ஒற்றுமை, கலை மதிப்பு, அன்பு—இந்த ஐந்துமே இந்துஸ்தானியை முன்னேற்றின. இவ்வைந்துமே நமது முன்னேற்ற வாழ்வின் பஞ்சப் பிராணன்.

11. இப்போது

இப்போது இந்துஸ்தானி தமிழகத்தில் நுழைந்ததில் வியப்பில்லை. அது ஒரு தனி மனிதர் சம்மதத்தால் இங்கு வரவில்லை; மந்திரிகளின் சுயேச்சாதிகாரத்தால் வரவில்லை. இந்தியின் வரவு கால நிகழ்ச்சியில் ஒன்று; அது காலசக்தியின் பலம் பெற்றுவருகிறது. பாரத சமுதாயமே இந்தியை இங்கு கொண்டுவருகிறது. அதை யார் தடுக்கமுடியும்? இன்றில்லாவிடில் நாளைக்கு அது வரவேண்டியதுதானே? எத்தனை நாள்

நாம் அன்னிய மொழியைப் பேசிக்கொண்டிருப்பது? எத்தனை நாள் நாம் பிரிந்திருப்பது? விந்தியமலையைத் தாண்டி நமது தமிழ் நாகரிகம் செல்லவேண்டுமானல், விந்தியமலையைத்தாண்டி வந்த இந்தியை நாம் வரவேற்க வேண்டும். விந்தியமலையைத் தாண்டிவந்த அகத்தியரை நாம் மதித்ததுபோலவே இந்த இருபதாவது நூற்றுண்டு முனிவரையும் நாம் மதிக்கவேண்டும். வடக்கும் தெற்கும் சேர்ந்துதானே ஹிந்துஸ்தானம் ஆனது!

பாரத நாட்டில் இந்தியை வேண்டாமென்று புறக்கணிப்போர் எத்தனை பேர்? எண்ணிப்பாருங்கள். தென்கோடியிற் சிலர்தான் அவ்வாறு எதிர்க்கின்றனர். காங்கிரஸ் பாரத சமுதாயம்; அது பாரத மாதாவின் திருவடிவு. வங்கர், குஜராத்தியர், மராதியர், பஞ்சாபிகள், திராவிடர் எல்லாரும் அதன் அங்கத்தினரே..................தேசத்திற்கெல்லாம் பொதுவாக ஒரு மழை பெய்தால், என் வீட்டுக் காரை கரைந்து போகுமே என்று அதைத் தடுக்க முடியுமா? "உன் காரையைக் காத்துக்கொள்; எல்லாருக்கும் பெய்யும் மழையைத் திட்டாதே!" என்கிறேம். பொதுஜன சம்மதத்தை மந்திரிகள் நிறைவேற்றுகின்றனர். மந்திரிகள் தனி மனிதர்களல்லர்; அவர்கள் பொது ஜனங்களின் பிரதிநிதிகள். பொதுஜன சம்மதம் பெற்ற ஒரு பொது நலத்திற்காகவே அவர்கள் வாழ்வைப் பலிதானமாக்கி யிருக்கிறார்கள். ஆதலால் கால வெள்ளத்தைக் கூச்சலிட்டு எதிர்ப்பதிற் பயனில்லை. நாட்டிற்கே உயிர்கொடுத்த நல்லோர்கள் மீதா நாம் வசை தொடுப்பது?

12. ஹிந்தி கற்க

இந்தி வந்தால் தமிழை விழுங்கும் என்று சிலர் அஞ்சுகின்றனர். அஞ்சுவதேன்? நாம் இந்தியை நன்முகக் கற்றுக்கொண்டு தமிழ்க் கலையை அதன் மூலம் வடநாட்டிற் பரப்பலாமே. ஒன்று சொல்லலாம்; 'ஐயா தமிழரில் 6% கூட எழுதப் படிக்கத் தெரியாதவராயிற்றே. பிறமொழிகளைக் கொண்டு வந்தால் உள்ள தமிழும் போய்விடுமே' என்னலாம். இது சிந்திக்கத்தக்க ஆட்சேபமே. அதற்கு ஒரு மாற்று என்னவென்முல், முதலில் இரண்டு மூன்று ஆண்டுகள் கட்டாய மூலதாரக் கல்வியால் தமிழருக்கெல்லாம் எழுத்தறிவைப் புகட்டியபின் இந்தி கற்பித்தல். ஆனால் தற்போது இந்தி மூலாதாரக் கல்வியைப் பாதிக்கவில்லை. 5, 6, 7-வது பாரங்களிலேதான் இந்தி கற்பிக்கின்றனர். மந்திரிமார் நன்கு சீர்தூக்கிப் பார்த்தே ஆணித்தரமாக இந்துஸ்தானித் திட்டத்தை வகுத்திருக்கின்றனர்; இந்துஸ்தானியால் பரீட்சை தேறுவதற்கும் யாதொரு தடையில்லாது செய்திருக்கின்றனர். தியாகத்திலும், பொதுநலத்திலும், அறிவாற்றல்களிலும் சிறந்து பொதுஜன நம்பிக்கை பெற்ற நல்லோர் செய்த இச் செயலை எதிர்ப்பது தோல்வியிலேயே முடியும். தோற்பன தொடரேல். சத்யாக்கிரகத்தைக் காந்தியிடமா காட்டுவது? ஊசியின் சினத்தை வைரத்திடமா காட்டுவது? காட்டிப்பார்க்கட்டும்.

13. நல்லகாலம்

இந்தி வந்ததனல் எனக்கு இரட்டை மகிழ்வு. எப்படியும் நாம் கற்றே தீரவேண்டிய ஒரு பொது

மொழி நமது வீட்டைத்தேடி வந்துவிட்டது. இந்தி என்றதும்'குப்' பென்று தமிழுணர்ச்சி எழுந்துள்ளது. இந்தியைப் போற்றுவோரும் "தமிழ் வாழ்க!" என்கின்றனர்; இந்தியைத் தூற்றுவோரும் "தமிழ் வாழ்க!" என்று கூவுகின்றனர். இந்த வாழ்த்து எனக்கு வெற்றி முரசம்போலக் காதிற் படுகிறது.

தமிழுக்கு நல்லகாலம் வந்துவிட்டது! இந்தி வந்தது தமிழ் எழுந்தது! இச்சமயம் நாம் செய்யத்தக்க தென்ன? வீண் கூச்சலை விட்டொழிக்க வேண்டும். மனித சக்தியை வீணாக்கும் கிளர்ச்சிகளை விலக்க வேண்டும். இந்தியைக் கற்பது நமக்கே நல்லது. அப்போது தான் வடநாட்டாருடன் நாமும் கைகோர்த்து நிற்கலாம். ஒரு பயில்வான் நமது வீட்டிற்கு வந்து விட்டால் அஞ்சி ஒளியக்கூடாது; வைது துரத்தவும் கூடாது. நாமும் அவனைப்போல நமது சக்தியை வளர்க்கவேண்டும். இந்தியைப் பகைக்காமல் தமிழைப் பதின்மடங்கு வீறுடன் வளர்க்கவேண்டும்.நமது நாவலரையும் பாவலரையும் இன்னும் பதின்மடக்கு அன்புடன் நாம் ஆதரிக்கவேண்டும். பிறரைப்பகைப்பதால், பிறரிடம் பொறாமை கொள்வதால் நாம் முன்னேற முடியாது. அவர்கள் தமது மொழிக்கு என்ன செய்கிறார்களோ அதை நாம் தமிழுக்குச் செய்யவேண்டும் ஹிந்திக்கு அஞ்சவேண்டாம். தமிழைப் பலபீடமாக்குங்கள். இதையே நெடுநாளாக நான் சொல்லி வருகிறேன்; இதைப்பற்றி முன்பே சில கட்டுரைகள் எழுதியுள்ளேன். பகையும் பொறாமையும், வசையும் மஞ்சட் காமாலையும் ஒழிக! அன்பும், ஆர்வமும், ஒற்றுமையும் வளர்க!

14. தமிழ் எழுத்து

இப்போது தமிழ் நாட்டின் முதன்மையான சம்பவம் திடீரென்று தமிழருக்குச் தமிழுணர்ச்சி வந்ததேயாம். இது யாரால் வந்தாலும் சரி அவரை நாம் மதிப்போம். பாண்டவரும் துரியோதனாதிகளும் போர் புரிந்த குருக்ஷேத்ரத்தினின்று கீதை உதித்தது. அதுபோல ஹிந்தி இயக்கத்தின் தீவிரத்தால் தமிழர் உறக்கம் குலைந்தது! தமிழ் வீறுற்றெழுந்தது. இதையே நான் மனதார வரவேற்கிறேன். இப்போதெழுந்த கனல் ஒவ்வொரு தமிழர் உள்ளத்திலும் பற்றியேற வேண்டும். தமிழை வளர்க்க ஒவ்வொரு தமிழனும் கங்கணங்கட்டிக் கொண்டு முன்வரவேண்டும். தமிழ், தமிழர், தமிழ்நாடு இம்மூன்றும் தமிழன் உள்ளமும், உயிர்ப்பும், உடலுமாகவேண்டும். தமிழ் முன்னேற இப்போது ஒரு மின்சார சக்தி பிறந்துள்ளது. அதை வீணாக்காமல் அடக்கமாக, ஒற்றுமையாக நமது மொழிகளிலுள்ள குறைகளை நீக்கி, நிறைவாக்க வேண்டும். கல்வி, தொழில், வாணிபம், பொருளாதாரம், கலை, சாத்திரம், காவியம், ஓவியம், சிற்பம், நடனம், அரங்கம், இசை, கதை, சொற்பொழிவு, அரசியல், சமூகம், சமயம் முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழர் முற்பட்டுப் பணிசெய்ய வேண்டும். செயலற்ற ஆவேசப் பேச்சுக்களாலும் பொருளற்ற பொறாமைக் கிளர்ச்சிகளாலும் பயனில்லை. "நான் தமிழன்; இன்று நான் 24 மணி நேரம் உயிர்த்திருக்கிறேன். இதில் தமிழ் வளர்ச்சிக்கு 2 மணி நேரமாவது செலவிட்டேனா?" என்று ஒவ்வொரு தமிழனும் தன்னையே தினந்தோறும் கேள்வி கேட்கட்டும்.

15. தமிழை வளர்க்க முற்படுக

காலக்கடலை எதிர்த்துக் கூச்சற் போடுவதிற் பயனில்லை. தமிழ்க் கப்பலை ஒழுங்குபண்ணி அக் கடலைத் தாண்டி ஞாலத் துறைகளையெல்லாம் அளக்க வேண்டும். கவிகள், புதுப்புதுக் கவி மலர்களால் தமிழன்னையை வழிபடுக! நாவலர் நாமலரால் தமிழ் மணம் பரப்புக; பாவலர், தமிழ்ப் பெருமையைப் பாடுக! தமிழில் சாத்திரங்கள் செய்க. எவரெவர்க்கு எவ்வெக்கலையில் தேர்ச்சியுண்டோ அதைக்கொண்டு தமிழை வளர்க்க முற்படுக. பல மொழி நயங்களையும் தமிழில் கூட்டுக. தமிழ்ச் சொற்களை இன்னும் ஏராளமாகப் பெருக்குக. தமிழ்க் கலைகளும், கவிதை களும் இந்தி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் உலவச் செய்க. ஊர்தோறும் தமிழாலயம் நிலை நாட்டிப் பணிபுரிக. தமிழும் தமிழ் நாடும் தமிழரும் முன் னேறும் வகையை விரிவாகப் பைந்தமிழ்ச் சோலை, தமிழுணர்ச்சி என்னும் நூல்களிற் காண்க. அவை தான் எனது சம்மதம். சில நண்பர்கள் இந்தியைப் பற்றி எனது அபிப்பிராயத்தை விரிவாக எழுதச் சொன்னதால் விரிவாகவே எழுதியாயிற்று. எம் மொழியையும் வெறுக்காமல் தமிழை வளர்க்கவேண் டும். பிறமொழி நயங்களைத் தமிழ் தன்னுட் சீரணித்துத் தனிக் கலையாக உயரவேண்டும். தமிழ்க் கலை வடக்கும் மேற்கும் கிளர்ந்து பரவி உலகை வெல்லவேண்டும்.

தமிழுக்கு ஒரு தனி ஆற்றல் உள்ளது. அதைக் கொண்டு அது ஆங்கிலம் போல உலகில் ஓங்கலாம்.

இவை எனது உறுதியாம். இந்த உறுதி எனது தமிழருக்கும் மனத்தில் ஊன்றித் தமிழ் உலகில் பொலிக. எந்தாய் வாழ்க!

தமிழர் செய்யவேண்டுவதென்ன?

16. தமிழ் முழக்கம்

தமிழர் ஆற்றல் தமிழ் முன்னேற்றத்திற்கே செலவழிய வேண்டும்; தமிழை ஆங்கிலத்திற்குச் சமானமான உலக மொழியாக்க வேண்டும்; தமிழர் நாகரிகம் மேற்கையும் கிழக்கையும் ஆளவேண்டும்; ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும், ஜப்பானியருக்கும், அமெரிக்கருக்கும் உலகில் ஒரு மதிப்பு இருப்பதுபோலத் திருமாவளவன் மரபாகிய தமிழருக்கும் உலகில் ஒரு சிறப்பு உண்டாக்கவேண்டும். தமிழ்க் கலை, நிலையுலகின் அரியணை வகிக்க வேண்டும்—இது எனது ஆர்வம். இது திருவருளாற் கைகூடவேண்டும். இப்போது தமிழர் தலைநிமிர்ந்து "தமிழ் வாழ்க" என்று இருபுறமும் ஆர்க்கலிப்பதைக் கேட்க என் உள்ளம் பூரிக்கிறது. இந்தத் தமிழ் முழக்கம் என் உள்ளத்தில் அளவற்ற இன்பத்தை ஊக்குகிறது! "தமிழ் வாழ்க! தமிழ் உயர்ந்தது!" என்று என் அந்தராத்மா வீரமுழக்கம் செய்கிறது! "இனித் தமிழன் உறங்கமாட்டான்" என்று என் ஆர்வம் உறுதி கூறுகிறது.

17. தமிழ்ப்பணி

இச் சமயம் நாம் ஒன்றுபட்டு எல்லையற்ற தமிழ்ப்பணியாற்ற வேண்டும். நமக்கு மலைபோலப்

பணிகள் குவிந்து கிடக்கின்றன. வடநாட்டார் முன்னே நாம் தலைநிமிர வேண்டும்; உலகின் முன்னே நாம் தலை தூக்கவேண்டும். ஹிந்தியைவிடப் பத்து மடங்கு தமிழ் எழில் பெற்றோங்கச் செய்யவேண்டும். ஆங்கிலத்திற்கு நிகராகத் தமிழை வளர்க்கவேண்டும். இந்தப்பணியில் தமிழர் கருத்தூன்ற வேண்டுமென்று கருதியே இந்நூலை எழுதலானேன்.

எனதருமைத் தமிழர்களே, இதன் முற் பகுதியிலே தங்களுக்குப் பிடிக்காதனவும் இருக்க லாம். தங்களுக்கு ஒப்பிய செவ்விய செய்திகளும் இருக்கலாம். உலகம் பலவிதம். எண்ணம் பலவகை. முற் பகுதியில் யான் விளக்கியிருப்பது எனது அபிப்பிராயமட்டுமல்ல. பல மனப்பான்மையுடை யார் கருத்துக்களையும் அதில் எடுத்துரைத்திருக் கிறேன். யார் மனதையும் புண்படுத்த இதை எழுத வில்லை. என்னருமைத் தமிழர்களே, உங்கள் மனத்தை நான் புண்படுத்துவேனா? எனக்கு எது நலம் என்று தோன்றியதோ அதைச்சொல்ல எனக்கு உரிமையுண்டல்லவா? அதைப் போலவே நான் சொல் வதைக்கொள்ளவோ தள்ளவோ உங்களுக்கும் உரிமை யுண்டு. இனி உங்கள் கேள்விகளுக்கு என்னாலான சமாதானஞ் சொல்வேன்.

18. ஆங்கிலம்

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் சில நண்பர் கள் "தமிழருக்கு இந்தி வேண்டுமா?" என்று என்னைக் கேட்டனர். "தமிழுக்கு இந்தி அவசியமேயில்லை; இந்தி யிடமிருந்து தமிழர் கொள்ளவேண்டிய கலைச்செல்வம்

எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று விரிவாகப் பதில் எழுதினேன். "தமிழ் வளர்ச்சிக்கு ஆங்கிலம் துணையாகுமா?"என்றொருவர் கேட்டார். ஆகும்; தமிழுக்குவேண்டிய அருட்செல்வம் உள்ளது; பொருட் செல்வத்திற்கு இந்திய மொழிகளெல்லாம் ஆங்கிலத்தையே எதிர் நோக்குகின்றன. உதாரணமாக வங்க மொழி ஆங்கிலத்தின் துணையால் முன்னேறிச் சிறப்புற்று விளங்குகிறது. அதைப் பின்பற்றியே ஆந்திரம் முன்னேறிவருகிறது. தற்கால வாழ்விற்கு இன்றியமையாத தொழில்கள், பொறி நுட்பங்கள், பூத பௌதிக சாத்திரங்களெல்லாம் ஆங்கிலத்திலேதான் உள்ளன. நம் நாட்டிலும் அவை உண்டு. நமது முன்னோர் சுவடிகளை ஆராய்ந்து மேனாட்டார் புதிய முறையில் அற்புதமான சாத்திரங்கள் எழுதியுள்ளனர். இச் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்.

ஒரு பறவைக்கப்பல் அமைக்க வேண்டுமானால், ஒரு புகைக்கப்பல் கட்டவேண்டுமானால், ஒரு மின் சாரப் பொறி செய்யவேண்டுமானால் அதற்கு ஏராளமான கணக்கு நுட்பங்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான சிறப்புச் சொற்கள் உள்ளன. அவற்றையெல்லாம் ஆங்கிலம் தெரிந்தாலொழிய நாம் அறிந்து கொள்ள முடியாது. உதாரணமாக பிரிட்டிஷ் என்சைக்ளோபேடியாவில் Mechanics என்ற பகுதியைப் பாருங்கள். நமது மனம் மலைப்புறுகிறது! "இதென்ன ராக்ஷஸவேலை! இம் மொழியை இவர்கள் எப்படி முன்னேற்றி யிருக்கிறார்கள்!" என்று நாம் வியப்படைகிறோம்! இந் நிலையில், தமிழர் உலகின் முன் ஓங்கவேண்டுமாயின் ஆங்கிலம் இன்றியமையா

ததாகும். இன்று ஜவஹர்லால் மேனாட்டில் நமது விடுதலை முழக்கத்தைப்பற்றிப் பேசுகிறார். ஆங்கிலத்தின் உதவியாலேதான் அவர் அப்படி உலகிற்கு இந்தியாவின் உள்ளத்தை விளக்க முடிகிறது. சிகாகோமேடையில் இந்திய வேதாந்தச்சிங்கம் ஆங்கிலத்திலேயே கர்ஜித்தது. தமிழருக்கு ஆங்கிலம் வேண்டும். இந்தியா உலகுடன் பழகுவதற்கு ஆங்கிலம் வேண்டும். நாட்டுக் கல்வி (National Education) என்னும் தமது அரிய நூலில் லாலா லஜபதிராய், 'ஒவ்வொரு இந்தியனும் ஆங்கிலம் கற்கவேண்டும்; அது தக்க வளர்ச்சி பெற்ற மொழி' என்று வற்புறுத்துகிறார்.

நமது மொழி வளர்ச்சியைப்பற்றிப் பேசுங்கால் நாம் கிறிஸ்தவப் பாதிரிமார்களையும் மறக்கக்கூடாது. தமிழில் முதல் வசனநூல் எழுதியவர், முதல் அகராதி கோத்தவர் வீரமாமுனிவர் (Father Beschi). தமிழில் சிற்றிலக்கண எழுதியவர்; குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்; ஜி. யு. போப் ஆவர். ஒரு கட்டுப்பாட்டுடன் ஆழ்ந்த ஆராய்ச்சித் திறமையுடன் வேலை செய்யும் பண்பு ஐரோப்பியரிடம் உள்ளது. அவர்களைப் போல நாமும் தமிழுக்கே பணிசெய்து வாழ்ந்தால் "தலை தூக்கலாம்." தமிழ் நிறைவான வளர்ச்சி பெறுமட்டும் தமிழுக்கு ஆங்கிலம் வேண்டும்.

19. தமிழ்—இந்தி

அடுத்தாற்போல ஒரு கேள்வி வந்தது. "தமிழர் இந்தி கற்பது நலமா?" ஆம்; இந்தியைப் பெரும்பாலான இந்து முஸ்லிம்கள் தெரிந்துகொள்வர்; நம் நாட்டிற்கென்று ஒரு பொதுமொழியை விரும்பினால்

அது பெருந்தொகையினர் பேசும் இந்தியாகத்தான் இருக்கமுடியும். உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஐரோப்பியர் என்னைப்பார்க்கவந்தார்; அவர் கையில் ஆங்கில எழுத்தில் எழுதிய ஒரு இந்துஸ்தானி நூல் இருந்தது. "நீங்கள் இந்துஸ்தானி கற்கிறீர்களா?" என்று கேட்டேன். "ஆம் நான் இனி இந்தியாவிலேதானே இருக்கப்போகிறேன்; இந்தியர் மொழி இந்துஸ்தானி யல்லவா?" என்றார். "உங்களுக்கு யார் அப்படிச் சொன்னது?" என்று கேட்டேன். "எந்த ஐரோப்பியனும் இந்துஸ்தானி கற்றால் இந்தியருடன் தாராளமாகப் பழகலாம் என்பதை யறிவான்" என்றார். இந்தமாதிரி இந்துஸ்தானிக்கு ஒரு பெயர் ஏற்பட்டுவிட்டது. தமிழரும் இந்துஸ்தானி கற்றால் நல்லது.

20. கட்டாயம்

"ஹிந்துஸ்தானியை மாணவருக்குக் கட்டாய பாடமாக வைத்தல் கெடுத லல்லவா?" என்றொரு கேள்வி வந்தது. அதற்குப் பதில்:—

"தமிழர் நாட்டில் தமிழ் மொழிதான் கட்டாயமாயிருக்கவேண்டும். தமிழ் முதன்மையாகவும், அடுத்தபடி ஆங்கிலம், அடுத்தபடி இந்தியும் இருக்கலாம். பாடமெல்லாம் தமிழிலேயே புகட்டவேண்டும். பத்து வயது மட்டும் மாணவன் தாய்மொழி கற்கவேண்டும்; பத்துமுதல் பதினாறு வயது மட்டும் தாய் மொழியுடன் ஆங்கிலமும் நாட்டிற்கிசைந்த ஒரு மொழியும் கற்பதில் குற்றமில்லை. அப்போதும் மற்ற மொழிகளை ஒருமணி பயின்றால் தாய்மொழியை

நான்கு மணி நேரம் பயிலவேண்டும். எல்லா வகுப்புக்களிலும் தமிழ் கட்டாய பாடமாக யிருக்க வேண்டும். 11 முதல் 16 வயது மட்டிலும் மனித சக்திகள் வளரும் பருவம் (Formative Period). அப்போது மாணவன் எளிதாக வேறு மொழிகளைக் கற்கலாம். பதினேரு வயதிற்குக் குறைந்த மாண வருக்கு இந்நியை வற்புறுத்தினுல் அதை நாம் ஒப்புக் கொள்ளமுடியாது. 11-வயது மட்டும் பழக்க வழக்கங் கள் பிடிபடும் காலம் (Plastic Period). அப்போது மாணவன் மூளை தாய்மொழியிலேயே உழைக்கவேண் டும். அச்சமயம் அன்னிய மொழிகளை வற்புத்தினுல் தாய்மொழிக்குக் கேடுண்டாகும். உதாரணமாக, எனக்குப் பிள்ளைப் பருவத்திலேயே ஆங்கிலப் பழக்கம் ஏற்பட்டது. கலாசாலை வாழ்வில் ஆங்கிலம் பேசுவதே பெருமையெனக் கொண்டேன். அக்காலக் கல்வி ஒரு கொடுங் கோலாட்சியா யிருந் தது. நான் ஐந்தாம் வகுப்பில் சிறிய "நெஸ்பீல்டு கிராமர்" குருட்டுப் பாடம் போட்டேன். நாலாம் வகுப்பில் ஆங்கிலப் பாடம் நாளைக்கு பத்துவரிகள் மனப்பாடம் செய்யச் சொல்லுவர். வகுப்புத் தொடங்கியதும், பிள்ளைகள் மனப்பாடம் செய்ததை எழுதவேண்டும். பிறகு ஒப்பிக்கவேண்டும். அதன் பிறகு, ஆங்கில இலக்கணம் ஒப்பிக்கவேண்டும். தமிழ் இலக்கணம் என்றால் வேப்பங்காயா யிருக்கும். தமி ழய்யா வகுப்பில் ஏகச் சத்தமாயிருக்கும். ஐயாவுக் கும் பிள்ளைகளுக்கும் லடாய் நடக்கும். பூகோளம், சரித்திரம், கணக்கு முதலிய பாடங்கள்கூட 5-வது வகுப்பு முதல் நான் ஆங்கிலத்திலேயே படித்தேன்.

Mars'den's Indian History, Radhakrishnaiyar's Arithmetic, Chellappa Sastry's English History, Nesfield's Grammar, Macmillan's Reader, Narayanasamy's Science Primer எல்லாம் என் முன் நிற்கின்றன. இவை நான் 6-வது வகுப்பிற் படித்த நூல்கள். இவற்றைப் பாடம் பண்ண நான் மார்பிற் புடைத்துக் கொண்டதும், பட்டினியிருந்ததும், உக்கிபோட்டதும், இவற்றிற்காக என் பள்ளித் தோழர் வாங்கிய பிரம்படியும், குத்தும், வசவும் இன்னும் எனக்குப் பயங்கரமான காட்சியளிக்கின்றன. பள்ளிக்கூடத்தை நான் கொலைக்களமாக நினைத்தேன். ஏழாவது வகுப்பில் தமிழய்யா தவிர வேறு யாரும் தமிழ்ப் பேசுவதில்லை. தமிழ் இலக்கணம் மூலையில் ஏறுவதேயில்லை. எல்லாம் ஆங்கிலமயமாகவே யிருக்கும். எனக்கு உபாத்தியாயர்களா யிருந்த திருவாளர்கள் நான் ஏதாவது தமிழில் கேட்டால் முகத்தை அப்புறம் திருப்பிச்சுளித்து, "Speak in English" என்பர். இவ்வாறு ஆங்கிலம் பழகிப்பழகி முக்கால் ஆங்கிலமும் கால் தமிழும் கலந்து பேசும் நிலைமைக்கு வந்துவிட்டேன். என்னைப் பிடித்த நல்லகாலம் இளமையில் எனக்கொரு யோக மூர்த்தியின் நட்பும் பழக்கமும் கிடைத்துத் தனியாகத் தமிழ் பயின்றுவந்தேன். சத்தியமாகச் சொல்லுகிறேன்; இப்போதிருக்கும் அன்னியக் கல்வி முறையில் தாய்மொழி முன்னேறாது; பத்துவயது மட்டும் எல்லாம் தாய் மொழியில் நடக்க வேண்டும். 11 முதல் 16 வயதுமட்டிலும் ஆங்கிலப் பாடந் தவிர மற்றவை யெல்லாம் தாய் மொழியிலே

யே நடக்கவேண்டும். எல்லா வகுப்புக்களிலும் தமிழ் கட்டாய பாடமாயிருக்க வேண்டும். ஏழாம் வகுப்புப் பையன் பதினெண் கீழ்க் கணக்குகளை முடித்துவிட வேண்டும். இந்துஸ்தானியை விளையாட்டாக, சம்பாஷணை முறையில் (Conversational method) கற்பிக்கலாம். வீட்டில் தாயுடன் பழகிப் பிள்ளை பேசக் கற்றுக் கொள்வதுபோல இந்துஸ்தானி உபாத்தியாருடன் அரைமணி நேரம் பழகிப் பையன் இம்மொழியைக் கற்றுக்கொள்ளலாம். தமிழகத்திற்காகத் தமிழ், தாய்நாட்டிற்காக இந்துஸ்தானி, உலகுடன் பழக ஆங்கிலம் இம் மூன்றும் தமிழருக்கு அவசியமே.

21. மொழி பல பழகு

மூன்று, நான்கு மொழிகள் கற்ற சிறுவர் மூளை இணைருதா? என்று கேட்கிறார் ஒருவர். பதில் சொல்லுகிறேன்:— சென்ற ஆண்டு இங்கொரு லேடீயர் வந்திருந்தார். என்னைப்பார்த்தார். ரஷ்யிய பாஷையிலின்று ஒரு செய்யுள் சொல்லக் கேட்டேன். 'இது நான் ஜெர்மனியிலிருந்து மொழி பெயர்த்தது' என்றார். 'ஜர்மனும் தங்களுக்குத் தெரியுமோ?' என்றேன். "நாங்கள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன், ரஷ்ஷியன் ஆகிய நான்கு மொழிகளைப் பள்ளிக்கூடங்களில் பயிலுகிறோம்" என்றார். இந்நான்கு மொழிகளிலும் அவர் புலமை பெற்றிருந்தார். பிரெஞ்சில் விக்தர் ஹ்யூகோ கவிதைகளை அவர் கம்பீரமாக ஒப்பித்தார். "நான்கு மொழிகள் கற்பது உங்களுக்கு வருத்தமாயில்லையா?" என்றேன். "கற்றுத்தானாகவேண்டும்; எப்படியோ அவற்றைப் படித்தே வருகிறோம்" என்றார். அவர்

ரஷ்ஷியப் புரட்சியில் தமது செல்வமெல்லாம் இழந்து பெர்லினில் குடியேறி ஒரு பள்ளிக்கூட உபாத்தியாய ராயிருந்தவர். ஜர்மன் பள்ளிக்கூடங்களைப்பற்றியும் கல்வி முறையைப்பற்றியும் விரிவாகச் சொன்னார். நமது தமிழ் மாணவர் அத்தகைய கல்விப் பயிற்சி பெறவேண்டும்.

ஸ்விஸ் நாட்டில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன்— இம் மூன்று மொழிகளும் வழங்குகின்றன. அவற்றை அந்நாட்டார் கற்றே தீரவேண்டியிருக்கிறது. நமது நாட்டின் அரசியலும், சமுதாய வாழ்வும், போக்கு வரத்து வியாபாரங்களும் நடைபெற ஒவ்வொரு இந்தியனும் தாய்மொழி முதன்மையாகவும், ஹிந்துஸ் தானியைத் துணை மொழியாகவும், ஆங்கிலத்தை உலக மொழியாகவும் கருதித் தக்கவாறு பயிலவேண்டும்.

22. பொது மொழி ஏன்?

"ஹிந்தி எதற்கு? ஹிந்தி கற்பதனால் தமிழுக்குப் பயனுண்டா?" என்றொரு கேள்வி வந்தது. அதற்கே பெரும்பாலும் இந்நூல் எழுதப்பெற்றது. இந்தி யருக்கு (Unity of consciousness) வேண்டும்; அதற்கு ஒரு பொது மொழி வேண்டியதே. மொழி யினால் ஒற்றுமை யேற்படாதென்று ஒருவர் கருது கிறார்.

ஆங்கிலம் பேசும் ஆங்கிலேயர் ஒரு தாயுணர்வுட னேயே வாழுகிறார். பிரெஞ்சுக்காரரும் அப்படி யே. மொழியால் ஒற்றுமையுண்டாவதை உலகெங் கும் காண்கிறோம். உதாரணமாக நான் வடநாட்டில் பிரயாணம் செய்யும்போது, ஒருவர் சந்தித்து, "தாங்

கள் மதராஸிலிருந்து வருகிறீர்களோ?" என்று ஹிந்தியில் என்னைக்கேட்டார். அவர் தமிழர் போலவே தோன்றியதால், நான் தமிழில் பதில் சொன்னேன். அவர் வெகு சந்தோஷத்துடன் என்னை தமது வீட்டிற்கழைத்துச் சென்று உபசரித்தார். கண்ணறியாச் சீமைகளிலும் மொழி ஒன்றானால் அன்பும் ஒன்றாகிற தைக் காண்கிறோம். தமக்கடுத்துள்ள தெலுங்கருக்கு தமது மொழி இனம் என்றால் ஒரு தனியன்புண்டு.

23. கலப்பு மணம்

"மொழியினாலில்லை; கலப்பு மணத்தினாலேயே ஒற்றுமையுண்டாகும்" என்கிறார் ஒருவர். அது உண்மைதான். இனிச் சாதி சமயங்களெல்லாம் கலந்துபோகும். உலகத்தில் ஒரு பெரிய சமூகப் புரட்சி நடக்கிறது. நாடு, நிறம், சாதி, வகுப்பு வேறுபாடுகளை யெல்லாம் இப் புரட்சி வெள்ளம் அடித்துச் சென்று சமரஸக் கடலில் கொண்டு தள்ளும். நாம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இப் புரட்சி வென்றே தீரும். அப்போதும் இந்தியாவிற்கு ஒரு பொதுமொழி வேண்டும். உதாரணமாக, ஒரு வடுகப்பெண்ணைத் தனித் தமிழன் மணக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். "காதலீ, குலமகட் கழகு கொழு நன்வழி நிற்றல்" என்று அவன் அவளுக்குப் புத்தி சொல்லுகிறான். "மீரு ஏமண்டீ செப்பேரு; ஏதோ கொபு கொபுர, கொறம்காரு அண்டாரே! மாகு அர்த்தங்காலே தண்டீ" என்று பிணங்குவாள் வடுகத் திருமதி. இருவருக்கும் ஹிந்துஸ்தானி தெரிந்திருந்தால் மனமறிந்து வாழலாமல்லவா? ஒரு வங்

காளி தமிழ்ப் பெண்ணை மணக்கிறுனென்று வைத்துக் கொள்வோம். வங்காளி "கிச்சு நாய்! (ஒன்றுமில்லை) என்பான். அவள் "என்ன சூ சூ நாய் !" என்று கிளம்புவாள்! இருவருக்கும் நாட்டுப் பொதுமொழி தெரிந்தால் கலப்பு மணத்தாற் பயனுண்டல்லவா!

24. நாட்டு மொழி

எவ்வழியாகப் பார்த்தாலும் இந்தியருக்கு ஒரு பொது மொழி வேண்டியதே; அது இப்போதைக்கு இந்துஸ்தானிதான் என்று நாட்டிலுள்ள அறிவாளிகள் தீர்மானித்திருக்கிறுர்கள். தமிழர் இந்துஸ்தானி கற்பது நல்லதுதான். பள்ளிப் பிள்ளைகள் மட்டுமல்ல, பொதுவாக எல்லாத் தமிழரும் காலத்திற்கேற்ற நாட்டு மொழியைக் கற்பது நல்லது. உதாரணமாக பிரான்ஸின் ஆதி மொழி குல்வா மொழி. கி. மு. 52-ல் யூலியகேசரி குல்வா நாட்டைப் படையெடுத்து வென்றுன். அவன் படை வீரர் அங்கே குடியேறினர். அவர்கள் பேசிய கொச்சையான லத்தின் சுற்றிலுள்ளவர்களுக்கும் பழகிப்போயிற்று. அந்தக் கொச்சை லத்தீனும் குல்வா மொழியும் சேர்ந்து இன்னும் பல மொழிக் கலப்புடன் பிரேஞ்சு மொழியாக வழங்குகிறது. பிரான்ஸில் இன்றும் குல்வா மொழி நேயர் உள்ளனர்; அம்மொழியை வளர்க்க அவர்கள் முயலுகின்றனர். அதற்காக அவர்கள் நாட்டு மொழியான பிரெஞ்சை வெறுப்பதில்லை. "நான் குல்வாதான் படிப்பேன்; பிரெஞ்சைக் காதாலும் கேளேன்" என்றெருவன் பேசினுல் என் செய்க! கால தேச வர்த்தமானங்களுக்கும், மனிதரின் தேவை

களுக்கும் ஏற்றவாறு மொழிகள் வழங்குகின்றன. கிரேக்கும், லத்தீனும், ஸாக்ஸனும் வழங்கிய ஐரோப்பிய நாட்டில் இன்று ஆங்கிலமும், பிரெஞ்சும், ஜெர்மனும் தலைதூக்கி நிற்கின்றன. ஜப்பானியர் தாய்மொழியைக் கட்டாயமாகக் கற்கின்றனர். அத்துடன் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற ஐரோப்பிய மொழிகளையும் பயிலுகின்றனர். ஜப்பான், ஆங்கிலம், பிரெஞ்சு, சீனம் இந்நான்கு மொழிகளையும் ஜப்பானியர் பயிலுகின்றனர். அதனால் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றனர்.

இப்போதைக்கு தமிழ், ஆங்கிலம், இந்தி இம்மூன்றும் தமிழருக்கும் வேண்டியனவே. 'இந்தியை மாணவருக்குக் கட்டாயப்படுத்தினால் தாய்மொழி கேடுறும்' என்கின்றனர் சிலர். இதைக் குறித்து இப்போது நாம் முடிவாக ஏதும் சொல்லமுடியாது. சில பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடம் நடக்கிறது. ஓராண்டு பொறுத்திருந்து, 'மாணவர் இந்துஸ்தானியை எப்படிப் பயிலுகின்றனர், அதனால் தாய்மொழியை மறக்கின்றனரா?' என்று நாம் பார்த்தே முடிவு கூறலாம். அவ்வாறு கட்டாய பாடத்தால் தாய்மொழி கேடுறுவதானால், அதைத் தமிழர் ஆட்சேபிப்பது முறையாகும். தாமே அதைப் பற்றிக் கவனிப்பதாக மந்திரியும் கூறுகிறார். இதனிடையே தமிழன்பர் இப்போது விழித்திருக்க வேண்டும். அல்லும் பகலும் இந்தியைவிடப் பதின்மடங்கு சிறப்புறத் தமிழை வளர்க்கவேண்டும். அதற்கு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுத்து நிறை

வேற்றவேண்டும். நிலையான பணிகளில் தமிழர் கருத்தூன்றித் தத்தமக்கு இயல்வன செய்க.

இப்போது நம்மைச் சுற்றி யெழுந்த தமிழுணர்ச்சியை மேன்மேலும் வளர்த்து ஒரு ஆவேச வேகத்துடன் தமிழர் பணி புரியவேண்டும். இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டை வடவர் வியக்கவேண்டும். தமிழ்க் கலையைப் பார்த்து வங்காளி "ஃகூப் பாலோ!" (வெகு நன்கு) எனல் வேண்டும்; இந்திக்காரன் தமிழ் வளங்கண்டு "கைஸா ஸுந்தர் ஹை!" என்று வியக்கவேண்டும். தமிழன் இப்போது வட நாட்டிற்குப் போனால் இந்தி பேச வேண்டியிருக்கிறதல்லவா? அப்படியே வடநாட்டார் தமிழகத்திற்கு வந்தால் தமிழே பேசும்படி யிருக்க வேண்டும். "தமிழருடன் பழகத் தமிழ் கற்றே தீர வேண்டும்" என்று வட நாட்டார் உணரச் செய்ய வேண்டும். இப்போது இந்தியைத் தமிழர் கற்க நூல்கள் உள்ளன; தமிழைப் பிற மொழியாளர் எளிதிற் கற்கப் புதிய முறையில் நூல்கள் எழுத வேண்டும். வட நாட்டிற்குச் செல்லும் தமிழிசைவாணர், தமிழ்ப் பாடல்களையே பாடவேண்டும். தேவாரம், திருப்புகழ் பாடினால் வங்காளி, குஜராத்தி, இந்திவாலா அனைவரும் மண்டையை உருட்டி "மீடா ஹை" என்கிறனர்.

பிற மொழியினருக்கும் தமிழ்ச் சுவையேற்ற வேண்டும். வழக்கில் இல்லாத ஆரியத்தைப் பல மொழியினர் பயில்கின்றனர். அதுபோல தமிழையும் கலைச் சுவைக்காக உலகோர் பயிலச் செய்யவேண்டும். அப்போது தமிழ் உலகிற் பரவும்.

எனதருமைத் தமிழர்களே, நன்கு சிந்தியுங்கள்; கருத்து வேறுபாடுகள் இயல்புதான். கௌரவமான முறையில் ஒருவருக்கொருவர் தத்தமது எண்ணங்களை வெளியிடவே வேண்டும். உதாரணமாக சர்க்காவைப்பற்றி 1924-ம் ஆண்டு காந்தியடிகளுக்கும் தாகூருக்கும் நடந்த விவாதத்தை நாம் அறிவோம். இருவரும் எவ்வளவு பெருந்தன்மையுடன் தமது சமாதானங்களை எடுத்துரைத்தனர்! கொள்கை வேறுபாட்டை ஒரு அறிவாளி யுரைத்தால் அவனைப் பிரதிவாதியாக நினைக்கக்கூடாது. தமிழனைத் தமிழன் பகைக்கக்கூடாது. தமிழன் சொல்லும் நியாயத்தைத் தமிழன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வேறுபாடிருந்தால் பெயர்களைக் குறிக்காது, ஆளைத்தாக்காது, "இந்தக்கொள்கையில் இன்ன பிழையுள்ளது; இது இவ்வாறிருந்தால் நலம்" என்று இன் சொல்லால் எடுத்துரைக்கவேண்டும்.

25 எண்ணித் துணிக!

எனதருமைத் தமிழர்களே, இவற்றைச் சிந்தித்துப் பாருங்கள்; கொள்வன கொள்ளுங்கள். கருத்து வேற்றுமை இருப்பது இயல்புதான். அதிலும் தாய் மொழியைப் பிறமொழி வந்து முட்டும்போது, பலருக்குப் பல கருத்து வேறுபாடுகள் தோன்றும். அவரவர் மனச் சாட்சிக்கு உகந்ததைச் செய்யுங்கள். "நமக்குத் தனித் தமிழே வேண்டும்; இந்தி இங்கு நுழையக்கூடாது; முன்னே சேரன் செங்குட்டுவன் கனகவிஜயரைப் பொருது வென்றது போலே, இப்போதும் செய்வோம்; விந்தியத்தைத் தாண்டி வந்த

இந்தியைத் தமிழ் எல்லைக்கப்பால் ஓட்டி முடுக்கு வோம் என்பாரும் உளர். அவர்களுக்கு அவ்வா றிய லுமா? செய்து பார்க்கட்டும். வாதர்லூப் போரில் நெப்போலியன் குருஷி என்னும் படைத்தலைவனை பிரஷ்ஷியர் தலைவனான புளுஷர் வராது தடுக்கும்படி பணித்தான். குருஷி செய்த தாமதத்தால் நெப்போலியன் தோல்வியுற்றான். இனித் திறனில்லை என்றறிந்ததும் நெப்போலியன் மாறுவேடம் பூண்டு, பாரிஸுக்கு ஓடினார். இரவு; நிலா அடிக்கிறது; ஆங்கில வீரர்கள் காக்கின்றனர் "நே" என்னும் ஒரு பிரெஞ்சு வீரன் காயம்பட்டு மயங்கிக்கிடந்தான். அவனை ஒரு ஆங்கிலேயன் சிறைப்பிடித்தான். 'நே' மயக்கம் தெளிந்து, "எனது பிரெஞ்சு வீரர்தாமே வென்றனர்?" என்று கேட்டான். "இல்லை அவர் தோற்றனர்; நாம் வென்றோம்; நீ என் சிறையாளி!" என்றான் ஆங்கிலவீரன். பிரெஞ்சு வீரன், "ஆங்கிலேயர் சிறையாளியா! அதிசயமாகப் பேசுகிறீரே?" என்றான் நே. "டே, அதிகம் பேசாதே, கைதி; போடுசலாம் இல்லேல் உயிர் விடுவாய்" என்று இறுமார்த்தான் ஆங்கிலேயன். "டே, உண்மையான பிரெஞ்சுக்காரன் கைதியாக இருப்பானென்று நம்பினாய்? உண்மையான பிரெஞ்சுக்காரன் எப்படித்தனது நாட்டிற்காக உயிர்விடுகிறான் என்பதைப்பார்!" என்று கர்ஜித்து எதிரியுடன் போர்புரிந்தே இறந்தான். ஆனால் ஹிந்தி நண்பர் நமது பகைவரல்லர். அவர் நமக்கு எல்லா நன்மைகளையும் செய்யும் நண்பராவர். ஒரு கிளர்ச்சியில் சிலருக்கு இறுதி மட்டும் போராட வேண்டுமென்றுந் தோன்றலாம், சிலருக்குக் காலத்

தூடன் ஒத்துப்போவோம்' என்று தோன்றும். "இந்துஸ்தானியா! வா; உன்னைச் சிரணம்பண்ணி விடுகிறோம். உன்னையும் உரம்போட்டுத் தமிழ்ப் பயிரை வளர்க்கிறோம்" என்று சில வீரர் முன்னிற்கலாம். அப்படிப் பல வீரர் முன்வரவேண்டுமென்பதே என் விருப்பம். நமக்கடுத்துள்ள ஆந்திரரைப் பாருங்கள். வங்காளி தன் மொழி வளர்ச்சிக்கு என்னென்ன செய்கிறானோ அதையெல்லாம் ஒன்று பாக்கிவிடாது தெலுங்கர் செய்கின்றனர். "இந்துஸ்தானியா? ஏண்டி!" என்று அதை வரவேற்றுக் கற்றுக்கொண்டு தனது தாய்மொழியை மேன்மேலும் வளர்க்கிறான் ஆந்திரன். ஆந்திர பத்ரிகா, பாரதி, திரிவேணி இரண்டையும் பார்த்தால் வடுகர் முன்னேற்றம் விளங்கும்.

26. தமிழ்த்தொண்டு

நிலையான தொண்டு செய்ய வேண்டும் தமிழர்; அந்தக் கரணசக்திகளை விழுக்கக்கூடாது. உங்களுக்குச் சில உதாரணங்கள் காட்டுகிறேன். (1) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பாருங்கள். அங்கே தமிழ்ப்புலவர் உமாமகேசுரனார் செய்துள்ள தனித் தமிழ்ப்பணிகளைக் காணுங்கள். தன் னியல்பிற் கேற்றபடி ஒரு கல்லூரி நிறுவி அவர் அரிய பணிசெய்கிறார். அந்த மாதிரியே தமிழன் தமிழ்ப்பணி செய்யவேண்டும். (2) சைவசித்தாந்தக் கழகத்தைப் பாருங்கள்; அக்கழகத்தார் பேரறிவாளர்; மாசற்ற தமிழர். தமிழுக்கும் சைவத்திற்கும் அவர் செய்துள்ள தொண்டுகள் அளப்பரிய. திருமுறை நூல்களையும், அரிய தமிழ் இலக்கியங்களையும் அவர்கள் ஆங்கிலப் பதிப்புகள் போன்று

அழகாக அச்சிட்டு அடக்க விலைக்குத் தந்து அருந் தமிழ்ப்பணி புரிகிறார்கள். அந்த மாதிரியான இலக்கியப்பணி தமிழுக்கு ஆக்கந்தரும். (3) மறைமலையடிகளைப்பாருங்கள். பல்லாவரத்தில் தமக்கென ஒரு நிலையம் அமைத்துக்கொண்டு, எவ்வளவு அடக்கமாக அவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். நாவலருக்குப் பிறகு ம றை ம லை ய டி க ளே அவ்வாறு தமிழுக்கும் சைவத்திற்கும் பணிபுரிந்துள்ளார் என்பது மிகையாகாது. அந்த மாதிரித் தமிழ்ப்பணி புரிபவரே இப்போது வேண்டும். (4) தமிழ்ப் பெரியார் டாக்டர் சாமிநாத ஐயர் செய்துள்ள தமிழ்ப்பணியைப் பாருங்கள். எடிசன் இயற்கையின் உள்ளத்தில் ஆழ்ந்து புதிய புதிய மின்சார அற்புதங்களை விளக்கினான். அதுபோல டாக்டர் சாமிநாதையர் பழந்தமிழ்க் கடலில் ஆழ்ந்து விலையிட முடியாச் செந்தமிழ் இலக்கியங்களை நமக்கு அளித்துள்ளார். அவர் எனக்கெழுதும் கடிதங்களில் வயதால் உடல் தளர்ச்சி யுற்றது. எனினும் பழக்கம் விடாமல், இன்னும் தமிழ்ப்பணி நடந்தே வருகிறது என்று குறிக்கிறார். அவருடல் நீண்ட தமிழ்ப்பணியால் முதிர்ந்திருக்கிறது. அவருள்ளம் இன்னும் வாலிபத்திட்பமுடனே யிருக்கிறது. இன்னும் அவர் கலைமகள் வாயிலாகத் தமது அனுபவக் கதைகளை எழுதிவருகிறார்; ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து புதிய புதிய நூல்களை நமக்குத் தருகிறார். அதுதான் தமிழ்ப்பணி. (5) வாலாஜபாத்து இந்து மதப் பாடசாலையைப் பாருங்கள். உடன்பிறந்தார் இருவர் ஒரு மனப்பட்டு நல்ல கல்வியளித்து வருகின்றனர். அது உண்மையான தமிழ்ப்பணியாகும்.

தமிழர்களே, சுற்றிலும் பாருங்கள். அயல்நாட்டார் நம் நாட்டிற்கு வந்து எவ்வளவு அரிய பணிகள் செய்து புகழ் பெற்றோங்குகின்றனர். பாருங்கள்! உதாரணம் காட்டுகிறேன்:—ராமலிங்கரும், ராமகிருஷ்ணரும் ஒரே காலத்தவர்; இருவரும் அருள்வாக்குப் பெற்றவர். அருட்பாவைப்போன்ற ஒரு நூல் உலகிலே கிடையாது. ராமகிருஷ்ணர் பெயர் இன்று உலகெல்லாம் முழங்குகிறது; ராமலிங்கர் பெயர் இன்று தமிழ் எல்லைக்குள்ளிருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு முன் மகாத்மா ராமலிங்கம் என்னும் ஆங்கில நூல் எழுதி வெளியிட்டதும் வடநாட்டார் பலரும் மேனாட்டார் சிலரும் நமது தமிழ் மஹானைப்பற்றி யறிந்தனர். அவர் வரலாற்றை ஒரு இந்திப் பத்திரிகை வெளியிட்டது. உலக மகான்களுடன் மஹாத்மா ராமலிங்கரையும் இன்று குறிக்கின்றனர். நமது தமிழ் நாட்டில் ராமகிருஷ்ண சங்கம் செய்யும் வேலையைப் பாருங்கள். சென்னையில் நடக்கும் ராமகிருஷ்ண கலாசாலையைப் பாருங்கள். நாங்கள் நடத்திய குருகுலம் வீழ்ந்த பரிதாபத்தையும் பாருங்கள். நமது சமரஸ ஸன்மார்க்க சபைகளின் வளர்ச்சிக் குறையையும் பாருங்கள். ஆல்காட்டும் பிளாவட்ஸ்கியும், அனிபெஸண்டும், அருண்டேலும் நமது தமிழ்நாட்டில் ஊன்றிச் செய்த பணிகளைப் பாருங்கள். அடுத்தாற்போல நமது சைவ மடாதிபதிகள் செய்யும் பணிகளையும் பாருங்கள். கிறிஸ்தவப்பாதிரிகள் நமது நாட்டிற் செய்துள்ள கல்வித்தொண்டைப் பாருங்கள். பசுமலை, பாளையங்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், சென்னை முதலிய இடங்களில் பாதிரிமார்கள் செய்துள்ள அறிவுத்

தொண்டுகளைக் காணுங்கள். சிறு சிறு கிராமங்களி லும் ஊன்றிக்கொண்டு எவ்வளவு கட்டுப்பாட்டுடன் இவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றுகின்றனர். அடுத்தாற்போல நமது சாமியார்கள் செய்யும் காரியங் களையும் பாருங்கள்! நமது சென்னையில் ஓங்கும் ஆந் திர பத்திரிகா நிலயம், தெலுங்கிற்குச் செய்யும் அளப்பரிய பணிகளைப் பாருங்கள். ஹிந்தி பிரசார சபையின் பணியைப் பாருங்கள்! தமிழர்களே, உலகில் நாம் பெருமைபெற வேண்டுமானால், நாம் சிறுமை பொறாமைகளை விலக்கி ஒன்றுபட்டுப் பணிசெய்ய வேண்டும். இப்போது தமிழுக்குப் புத்துயிர் வந்துள் ளது. தமிழர் கைகளுக்கு இப்போது சரியான வேலை யுள்ளது! பணி செய்யுங்கள். உங்களுக்கு இயன்ற துறைகளிற் பணி புரியுங்கள்.

27. நாட்டுணர்ச்சி

தமிழன் தமிழனைப் பகைக்கக்கூடாது, திட்டக் கூடாது. இது என் வேண்டுகோள். நாடு, மொழி என்னும் உணர்ச்சி வந்ததும் நமது சொந்த மனத் தாங்கல்களைக் கட்டிவைத்துவிட வேண்டும். ஒருவ ருக்கொருவர் கைகொடுத்துப் பொதுநலப்பணி புரிய வேண்டும். அதற்கும் ஒரு உதாரணம் கேளுங்கள். ஹாவ்லக் என்பவர் 1857ம்ஆண்டு பிரிட்டிஷ் இந்தியச் சேனையில் ஒரு தலைவராயிருந்தார். அவர் அனுபவத் தில் பெரியவர்; நல்ல வீரர். சேனையில் ஒரு உயர்ந்த உத்தியோகம் காலியானது. அதற்கு லாரனஸ் என்ப வரைக் கம்பெனியார் நியமித்தனர். "லாரனஸ் வய திற் சிறுவர்;வீரத்திற் சிறந்தவர்; ஹா, நான் பெரிய

வன் இருக்கையில் இச் சிறியவனுக்கா உயர்ந்த வேலை தருவது" என்று ஹவ்லக் எல்லிஸ் முனிந்தார். இருவருக்கும் பேனுச்சண்டை முதிர்ந்து ஒருவரையொருவர் பழிவாங்கிவிடுவது என்றே கச்சை கட்டினர். அச்சமயம் (1858) நானுசாஹெப் சண்டை தொடங்கினுன். வட இந்தியாவில் சுதந்திரப்போர் கிளர்ந்தது. மங்கல்பாண்டே என்பவர் முதல் வேட்டுப் போட்டுத் தூக்குமேடை யேறினுர். அச் செய்தி கேட்ட ஹாவ்லக், "நாம் தாய் நாட்டிற்காக இப்போது போர் புரியவேண்டும். எனது சகோதரர், லாரென்ஸ், இனி நாம் சொந்த மனஸ்தாபங்களை விட்டுவிடுவோம்; தாய்நாடு நம்மையழைக்கிறது. வா, நாம் முதலில் தாயின் பணிபுரிவோம்" என்று கடிதம் எழுதினுன். இருவரும் உடன்பிறந்தார்போல மனமொன்றிப் போர்புரிந்து ஆங்கிலக்கொடியை நிலைநாட்டினர். இந்த நாட்டுணர்ச்சி தமிழனுக்கு வரவேண்டும். தமிழனும் பாரதபுத்திரனே. நாடு அடிமை நோயால் வருந்துகிறது. அடிமையில் வடநாட்டடிமை வேறில்லை, தென்னுட்டடிமை வேறில்லை. அடிமைத் தளையை முறிக்க தமிழனும் கைகொடுக்க வேண்டும். அதை முதலில் தீர்க்கவேண்டும். வீடு தீப்பற்றியெரியும்போதா அண்ணன் தம்பிகள் பாக பத்திரத்திற்காகச் சண்டைபோடுவது? இப்போது நமது நாட்டிற்கு முதன்மையாக வேண்டுவது ஒருப்பாட்டுணர்ச்சி (Unity of Consciousness). அயர்லாந்தும், ரஷ்யாவும், ஜெர்மனியும் இவ்வுணர்ச்சியினுல் முன்னேறுகின்றன. நமது நாட்டில் அரிய பெரியார்களும், பெருமிதமான மக்களும், நாட்டாட்

சிக் கழகமும் ஒப்பிய ஒரு முடிவை மதித்து நடப்பதே மேற்சொன்ன ஒருப்பாட்டுணர்ச்சிக்கு ஆணிவேர் போலாகும். எமர்ஸன் இங்கிலாந்தில் பிரயாணம் செய்து, ஆங்கிலேயர் தன்மைகளை நன்கு ஆராய்ந்தவர். அவர் English Traits (ஆங்கிலப் பான்மைகள்) என்றொரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார். அதில் ஆங்கிலேயரின் நேர்மையும் கடமையுணர்ச்சியும் வியக்கத்தக்கன; திராஃபல்கார் போரில் நெல்சன் ஒரு கொடி போட்டான். அதில் England Expects Every man to do His Duty (ஒவ்வொருவனும் தனது கடமையை நிறைவேற்றுவானென்று இங்கிலாந்து எதிர்பார்க்கிறது) என்று எழுதியிருந்தது. அந்தச் சொற்றொடர் ஆங்கில வீரருக்கு ஒரு புதிய சக்தி யீந்தது. முன்னினும் பதின்மடங்கு வீரமுடன் போர்தொடுத்து எதிரியைச் சிதறடித்தனர் ஆங்கிலேயர். இந்தச் சொற்றொடர் ஒவ்வொரு ஆங்கிலேயன் உள்ளத்திலும் அழுத்தமாகப் பொறிக்கப்பெற்றுள்ளது" என்கிறார் எமர்சன். அதே மாதிரியே இச்சமயம் ஒவ்வோரு இந்தியனும் தனது கடமையைச் செய்வானென்று பாரதமாதா எதிர்பார்க்கிறாள்! இச்சமயத்திலா நாம் உட்சண்டைகளைக் கிளப்பி நாட்டின் ஒற்றுமைக்குக் கேடு செய்வது? சென்னை மாகாணத்திற்கு ஒரு தனிப் புகழைத் தந்த தியாகிகள் விட்டு முன்பா நாம் கூச்சல் போடுவது? அவர்கள் பிறர்க்கென வாழுவோர்; அல்லும் பகலும் நாட்டிற்குழைப்பவர். அவரையா நாம் பச்சை பச்சையாக வைவது? இது அடுக்குமா? சிந்தித்துப் பாருங்கள்!

28. நியாயமான வழிகள்

அதுபோல ஒழுங்கு முறையான கிளர்ச்சி செய்தால் கௌரவமாயிருக்கும். "சென்னை மாகாண வாக்காளர்களே, இந்தியைக் கட்டாயப்படுத்தினால் தமிழுக்கு கேடாகுமென்று தோன்றுகிறது. நீங்கள் அனுப்பிய பிரதிநிதிகள் இந்தியை வற்புறுத்துகிறார்கள். அதைத் தடைசெய்து முறையிடுங்கள். கேட்காவிட்டால் அவர்கள் பிரதிநிதித்துவத்தை ஒப்பாதீர்கள்" என்று ஹிந்தி வேண்டாதார் மனுச்செய்துகொள்ள உரிமையுண்டு. வாக்காளர் பெருமிதத்தினர் அவர் கட்சியை ஆதரித்தால் சட்டசபை அவர் சொல்லை ஏற்றே தீரவேண்டும். அல்லது இப்போது சில பள்ளிக்கூடங்களில் இந்தி நடக்கிறதல்லவா? சில மாதங்கள் பொறுங்கள். பள்ளிக்கூடத் தமிழ்ப் பண்டிதரையும், பிற உபாத்தியாயர்களையும் ஒரு சபை கூட்டுங்கள். அச்சபையில் ஹிந்திப் பாடத்தால் ஏற்பட்ட பலாபலன்களை ஆராய்ச்சி செய்யுங்கள். இந்தி கற்கும் மாணவரைச் சபைகூட்டுங்கள். இந்திப்பாடம் அவர்களுக்கு கடுமையாகத் தோன்றுகிறதா நன்மையாகத் தோன்றுகிறதா என்று கேளுங்கள். எத்தனை மாணவர் இந்தியைக் கருத்துடன் கற்றிருக்கின்றனர் என்று சோதித்துப் பாருங்கள். பொதுஜனங்களின் சம்மதத்தை யறியுங்கள். இவ்வழியாக இந்தி நுழைவின் நன்மை தீமைகளை நாம் அறியலாமல்லவா? உபாத்தியாயர், மாணவர்—இருவர் தான் இதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லத் தகும். ஒரு புதிய காய்கறி கொடுத்துச் சமைக்கச் சொன்னால், அதன் குறைகுணங்களைச் சமைக்கும் இல்லாளும் சாப்பிடு

வோரும் அல்லவா சொல்லமுடியும்? 'இந்தி எளிதல்லவா!' என்று அதைக் கற்கும் மாணவரைக் கேளுங்கள். அதனால் மாணவர் தமிழ்ப் பாடத்தை அலட்சியம் செய்கிறார்களா என்று கணக்காயர்களைக் கேளுங்கள். பிறகு ஒரு முடிவிற்கு வாருங்கள். 'இதுதான் அரசியல் முறையாகும்' என்று எனக்குத்தோன்றுகிறது. அல்லது ஒன்று செய்யலாம். நடுநிலையாளரைக் கொண்டு, ஒரு பஞ்சாயத்து நியமியுங்கள். அதில் இரு தரப்பாளரும் சேர்ந்திருக்கவேண்டும். இப்பஞ்சாயத்தார் சென்னைக் கடற்கரையில் ஒரு பெரிய மகாநாடு கூட்டட்டும். அம்மகாநாட்டிற்கு வாக்காளர்களை அழையுங்கள். அக்கூட்டத்திற்கு இரு கட்சியினும் சேராத ஒரு நடுநிலையாளர் தலைமை வகிக்கவேண்டும். அவர் ஒரு உபாத்தியாயராயிருப்பது நலம். அந்த மாபெருங் கூட்டத்தில் இரு கட்சி அறிவாளரும் தமது கட்சியைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். பேச்சில் எந்தத் தனி மனிதனையும் தாக்கக் கூடாது. கொள்கையைப்பற்றிப் பேசவேண்டுமேயொழிய தனி மனிதரைப்பற்றிப் பேசக்கூடாது. இந்தி வாலாக்கள் ஐந்து பேர் பேசட்டும். இந்தி எதிர்ப்பாளர் பத்துப் பேர் வேண்டுமானாலும் பேசட்டும். பிறகு எதிர்க்கட்சியார் முறையீடுகளுக்கு மந்திரிகள் சமாதானம் சொல்லட்டும். அச்சமாதானத்தில் முரண் இருந்தால் எதிர்க்கட்சியாரில் ஒருவர் எழுந்து "இன்னது பிசகு" என்று சொல்லட்டும். இவ்வாறு இரண்டு கட்சிக்காரர் முறையீடுகளையும் பொதுஜனங்கள் கேட்கிறார்களல்லவா? "பொதுஜனங்களே, உங்களுக்கு இந்தி வேண்டுமா வேண்

டாமா? பள்ளிக்கூடங்களில் இந்தி படிப்பிக்க வேண்டுமா வேண்டாமா? இந்தியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டுமா வேண்டாமா" என்று கேட்டுக் கையுயர்த்தச் சொல்லிச் சம்மதம் பாருங்கள். கூட்டத்தில் பெரும்பான்மையோர் சம்மதப்படிக் காரியம் நடக்கட்டும். இதுதான் தரும நியாயமான வழியாகும். தமிழைக் கட்டாயமாக்கவேண்டுமென்றும் அதே கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றலாம். எதற்கும் ஒரு சட்ட முறை (Constitutional method) உண்டு. நமக்குள் வேற்றுமை, சண்டைகளை வளரவிடக்கூடாது" என்று மன்றுடுகிறேன். இரு கட்சியினரும் தனித்தனியாகக் கூட்டம் போட்டு ஆதித்திரவாணம் விடுவதிற் பயனில்லை.

29. சிந்தனைசெய்க

நாம் சேர்ந்து வாழவேண்டுமா, வேண்டாமா? நமது நாடு தனியருந்து முன்னேற வேண்டுமா, வேண்டாமா? நமக்கென்று ஒரு பொதுமொழி வேண்டுமா வேண்டாமா? பொதுமொழி வேண்டுமானால்; அதை ஆந்திரர் கற்று நிபுணராவதுபோலத் தமிழரும் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டுமா, வேண்டாமா? நாட்டிற்கு இது பொதுமொழி என்றறிந்த பின் அதைக் கற்று எல்லாரும் சேர்ந்து வாழ்வது நலமா அல்லது சிலர் மட்டும் தனியே ஒதுக்கிநிற்பது நலமா; வீடெல்லாம் விருந்துநடக்கையில் ஒருவனுக்கு வயிற்றுவலி என்றால் மற்றவர்கள் சாப்பிடாமல் இருந்து விடுவார்களா? தமிழர்களே! இவற்றையெல்லாம் சிந்தித்துப்பாருங்கள்; தமிழன் காலத்தை வெல்ல

வேண்டுமென்று மீண்டும் கூறுகிறேன். ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளுக்கு நிகராகத் தமிழை வளர்க்கப் பாடுபடுங்கள். அதேமாதிரித் தமிழை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளருங்கள். நம் நாட்டின் முன்மொழி தமிழ், பொதுமை வழியாகும். உரிமை அதற்குண்டு என்று இந்தியர் ஒப்பும்படி செய்யுங்கள். அதுவன்றோ வீரத் தமிழருக்கு அழகு! என்னருமைத் தமிழர்களே, அனுபவத்தைச்சொல்லுகிறேன். தமிழ்இன்றும் எவ்வளவோ முன்னேறவேண்டும். சுற்றிலும், ஆந்திரர், மராடியர், வங்காளிகள், குஜராத்தியர், அயோத்தியர், ஆங்கிலர், பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர், ஜப்பானியர் உள்ளனர். அவர்கள் வாழ்வையும் கூட்டுறவையும் நான் நுணித் தாராய்ந்துள்ளேன். அவர் மொழிகளில் வரும் பத்ரிகைகளைப் பார்க்கிறேன். தமிழ்படும் சிறுமையைக் கண்டு கலங்குகிறேன். வங்கம், இந்தி, தெலுங்கு, பிரெஞ்சு, ஆங்கிலப்பத்திரிகைகளைப் பார்க்கிறேன். அம்மொழியாளர் மொழிப்பற்றையும், கண்டு வியப்புறுகிறேன். ஒவ்வொருவரும் தமது தாய்மொழிக்குச் செய்யும் தொண்டினைக் கண்டு வியக்கிறேன். இந்த உலகச் சமுதாயத்தினிடையே தமிழும் தமிழரும் தலை தூக்க வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்பதும் எனக்குத் தோன்றியுள்ளது; உலக மொழிகளிடையே தமிழ் உயர்த்தும் வழியை நான் நன்குணர்ந்துள்ளேன். அவ்வழியே என்னாலான பணிகளை அடக்கமாகச் செய்து வருகிறேன். தமிழன்பர்களே, நான் சொல்லுவதை வேறு விதமாக நினைக்கக்கூடாது. காலவேகத்தை எதிர்த்து

விரட்ட முடியாது; அதை வென்று தலைநிமிருங்கள்! ஹிந்தி தமிழை விழுங்குமென்று அஞ்சுகிறீர்கள்? இதென்ன பேதைமை; கடலைக்குடித்த அகத்தியர் சந்ததிகளுக்கு இந்த ஹிந்தி எம்மட்டு; இந்தியும் வியக்கும்படித் தமிழை முன்னேற்றுவோம் வாருங்கள். நமது சக்திகளை வீணாக்காமல் நிலையான பணிகளைச் செய்வோம் வாருங்கள்!

வீட்டைப் பெருமை செய்வோம்—தமிழா
வீரராக வாழ்வோம்,
நாட்டைப் பெருமை செய்வோம்—கால
நலத்தைப் பேணிவாழ்வோம்.
ஏட்டுப்பூச்சிபோலே—தமிழா
இனியிருக்கலாமோ—சிங்கக்
கூட்டம்போல நிற்போம்—ஒரு
குலவுணர்ச்சி கொள்வோம்!

ஊழியன் பவர் பிரஸ், காரைக்குடி.

அமெரிக்காவில் ஒரு தமிழன்

★

அமெரிக்காவுக்கு ஒரு தமிழர் சென்ருர் என்ருல் அது ஒரு சிறப்பல்ல; அவர் அங்கேயே தங்கியிருந்து சாதாரண மனிதர் அசாதாரண மனிதர் ஆகியோரிடம் கலந்து பழகி, அதன்பிறகு நம்மிடையே வந்து அமெரிக்காவைப்பற்றித் தமிழில் சொல்ல வந்தால் யார்தான் கேட்காமல் இருப்பர்? தவிர, அமெரிக்காவை அப்படியே படம் பிடித்துக் காட்டக்கூடியவர் அவர் என்பது வெறும் வாய் வார்த்தையல்ல; அவர் (அமெரிக்க) நியூயார்க் நகர போட்டோ கிராபி இன்ஸ்டிடியூட்டிரில் 'கிராஜுவேட்'பட்டம் பெற்றவர். ஆம்; ஏ. கே. செட்டியார்தான்!

ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் ஜப்பான், ஜர்மெனி போன்ற பல நாடுகளையுங்கண்டு, அவற்றின் அனுபவத்தையுடையவர்; எனினும் அமெரிக்காவில்தானே அவர் படம் பிடிப்பதில் பட்டம் பெற்ருர்? எனவே, அவர் அமெரிக்காவைப்பற்றி இத் தமிழ் நூலில் காட்டியுள்ளதைச் சகல தமிழர்களும் வாசித்தறிய வேண்டும்.

அறிவுக்கோர் விருந்து!

அமுதத்தைத் திரட்டித் தந்தாற்போல அபேதவாதம் எனும் புத்தகமொன்று வருகிறது. அத்தாட்சியுடன் கூடிய விஷயங்கள். 'அபேத வாதத்தைப்பற்றிப் பேச விரும்புகிறவர்கள் இதை அவசியம் படிக்கவேண்டும்' என்று ஒரு பிரபல அபேதவாதி உத்தரவாதமளிக்கிறார்.

அபேதவாதம்

காவி

தமிழர் அறிவுக்குத் தயாராகிவரும் அரிய நூல்கள்

1. லெனினும் ஏகாதிபத்தியமும்
   க. சு. அறிவோன்
   நல்ல மொழிபெயர்ப்பாளர்

2. பொதுவுடைமை
   காவி
   அரசியல் ஆராய்ச்சியாளர்

3. கவியரசி சரோஜனி சரிதம்
   'அண்ணு'

அன்பு நிலய வெளியீடுகள்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

அவர்கள் இயற்றியவை

எங்களிடம் கிடைக்கும்

அன்பு மலர்கள் :

1.	பைந்தமிழ் சோலை	0—4
2.	இராமலிங்க விஜயம்	0–10
3.	இன்பமாலை	0—5
4.	தரும ஸாதனம் (மூலம்)	0—4
5.	உடலுறுதி	1—0
6.	பொதுநெறி	0—2
7.	திருக்குற ளின்பம்–ராப்பர்	1—4
	ஷை –கலிக்கா	2—0
	ஷை –De Luxe	2—8
8.	இன்று மனிதனும் இனி வரும் மனிதனும்	0—6
9.	வரகவி தாகூர்	0—3
10.	தியான மாலை	(அச்சில்)
11.	புதுமையும் பழமையும்	0—8
12.	திருநூல் (அல்லது) தூயவாழ்வு	1—0
13.	யோகசித்தி	2—8
14.	ஏழை படும்பாடு	1—8
15.	அரவிந்தர் யோக தீபிகை	(அச்சில்)
16.	புத்தர் கருணை	(அச்சில்)

உங்கள் லைப்ரரியில்

1. அன்பு நிலய வெளியீடுகள்
2. ராய. சொ. பதிப்பக நூல்கள்
3. சண்டே டைம்ஸ் வெளியீடுகள்
4. மாதர் மறுமணப் பிரசுரங்கள்
5. லோக சக்தி மலர்கள்
6. மாருதி பிரசுர நூல்கள்

ஆகியவை இருக்கின்றனவா? இன்றேல் எங்களிடம் கேளுங்கள். இதர நூல்களும் தருகிறோம்.

போஸ் பிரசுராலயம்,

காரைக்குடி.

அச்சுத் தொழிலில் அழகு

Fine Art Printers.

குறைந்த சார்ஜ்! குறித்த காலம்!!

பலவித கலர்களில் கல்யாணப்
பத்திரிகைகள், கார்டுகள்,
லெட்டர் பேப்பர்கள்,
பில்கள் ரசீதுகள்,
முதலியனவும்

அழகும் உறுதியுமான

பைண்டிங் வேலைகள்

லெட்ஜர், குறிப்பு, பேரேடு,
சட்ட புஸ்தகங்கள், முதல்
பைண்டிங் சம்பந்தப்
பட்ட எல்லாவித
வேலைகளும்

சிறந்த முறையில் செய்யத் தகுந்த இடம்:

ஊழியன் பிரஸ்,

காரைக்குடி.

ஒரு யோசனை

★

ஸ்ரீ போ. திருகூடசுந்தரம் M.A., B.L.,
எழுதியது

உலகத்தில் ஒப்புயர்வற்ற ஐஸ்வர்யம் எது? நன் மக்கட்பேறு என்று வள்ளுவர் கூறுகிறார் அல்லவா? அந்த விஷயம்பற்றி அவசரமாய் அறியவேண்டிய ஒரு முக்கிய யோசனையை ஆசிரியர் கூறுகிறார்.

நன் மக்கள்தான் அவசியம். எவரும் தம் இஷ்டம்போல் மக்களைப் பெறமுடியுமா? எத்தனை குழந்தைகள்—எப்பொழுது பெறுவது, இதை நாம் அறிய முடியுமா? குழந்தைகள் பெறாதிருக்க வழி உண்டா? இத்தகைய விஷயங்கள் இந்த நூலில் அடங்கியுள்ளன.

★

>போஸ்பிரசுராலயம்
காரைக்குடி.

ஊழியன் பிரஸ், காரைக்குடி.